உ

கடவுள் துணை.


# செந்தமிழ்.

தொகுதி-௩எ.] விக்கிரம௵ புரட்டாசி௴ [பகுதி-௧௧.

Vol. 37. September—October 1940. No. 11.


## கம்பராமாயணசாரம்.

[௬௫0-ஆம் பக்கத் தொடர்ச்சி]

மேற்கூறிய பிரமன் உருத்திரன் விட்டுணு என்ற மும்மூர்த்திகளில், நீ விட்டுணுவாகி, உன்னோடு சமானராக நீ வைத்த பிரமருத்திரர்களோடு ஒத்தவனாயுள்ளாய்.*

(ஒருவனே, ஒரு சபையின் அங்கத்தினன் என்ற முறையில் மற்றை அங்கத்தினருக்கு ஒத்தவனாகவும், தலைவனென்ற முறையில் அவர்களுக்கு மேலானவனாகவும் இருத்தல்போல) மூவரில் ஒருவனென்ற முறையில் நீ பிரம ருத்திரருக்குச் சமானனாகவும் தலைவனாயிருத்தலால் உயர்ந்தவனாகவும் இருக்கின்றாய். சீவர்களுக்கு அவரவர்கள் வினைக்குத்தக்கபடி வாழ்நாள் அளிக்கின்றாய்.

* 'ஜீவேச்வர ஜகத்' என்றும், 'பசு பதி பாசம்' என்றும் கூறப்பெற்ற 'உயிர் கடவுள் உலகம்' என்ற முப்பொருள்களும், என்றும் உள்ள நித்தியப் பொருள்களென்பதும், படைத்தல் காத்தல் அழித்தலென்பது உயிர்களை உடம்பிற்சேர்த்தல், நிலைநிறுத்தல், பிரித்தல் என்பதும், வைணவர் சைவராகிய இரு பெரு மதத்தினருடைய பொதுக்கொள்கைகள். இவ் இரு சமயிகளும் ஏகேசுவரவாதிகள். அந்த ஏகேசுவரன் திருமாலென்று வைணவரும், சிவனென்று சைவரும் கூறுவர். ஆதி ஆழ்வார்கள் ஒரு தெய்வமே திருமால் சிவன் என இருவடிவங்களுடனிருப்பதாகக் கொண்டு வணங்கினர்களென்பது, அவர்கள் திருவாய்மொழிகளால் அறிந்தது.

*

(அவர்கள்போல அளவுபட்ட ஆயுட்காலமுடையவனாகவில்லாமல்) என்றென்றுமுள்ளாய். (நீ ஒரு குறைவுமில்லாதவனாதலால்) எப்பொருளையும் விரும்பாதவனாகவுள்ளாய். உன் அடியார்கள் விரும்புகின்ற பொருள்களை அளிக்கின்றாய். நீ அவர்களுக்கு (அவர்களுக்குப் புறமாயுள்ள) நுகர்பொருளாகவும் (அகமாயுள்ள) அந்தராத்துமாவாகவும் இருக்கின்றாய். (அகமும் புறமுமல்லாமல் இடையேயுள்ள தேகத்தின்) ஆண்வடிவமும் பெண்வடிவமும் அலிவடிவமும் ஆகின்றாய். (இப்படியெல்லாம் ஆகும்) இந்த மகாமாயையை ஆரே அறிவார்!

வேதங்களுள் ஒன்று, உன் சொரூபம் முடிவற்றுப் பல படித்தாயுள்ளதென்னும்; மற்றொன்று, ஏகமூர்த்தமென்னும்; வேறொன்று, (அகக்கண்ணுக்குப் புலனாகும்) ஞானஒளியென்னும்; இன்னுமொன்று, (புறக்)கண்ணுக்குப் புலனாகும் சோதிவடிவமென்னும்; பின்னும் ஒன்று, ஆனந்தவடிவமென்னும்; பெயர்த்துமொன்று, இவையெல்லாமல்லாத வடிவமென்னும். (இப்படியெல்லாம் பலவேதங்கள் பலபடச்சொல்லும்படியுள்ளது உன் சொரூபம்) இந்த மகாமாயையை யாரே அறிவார்!

வேதங்கள், அவற்றின் முடிவான பகுதியாயுள்ள உபநிடதங்களில், உன்னை உண்மைப்பொருளென்று உண்மையுணர்வினால் உணர்ந்து உரைக்கும் நீ ஆளப்படும் அடிமையும் ஆவாய்; ஆளும் அரசுமாவாய்; இரவும் ஆவாய்; பகலும் ஆவாய்; சொல்லும் ஆவாய்; பொருளும் ஆவாய்; கொல்வானுமாவாய்; கொல்லப்படுவானுமாவாய்: (ஒருபொருளான நீ, இப்படியெல்லாம் பல எதிரிடை இரட்டைப்பொருள்களாகின்ற) இந்த மகாமாயையை யாரே அறிவார்!

அடியார்கள் மீளப்பிறவாமல், அவர்களுக்கு முத்தியளிக்கும் பெருமானே! (எடுத்த மனிதப்பிறவிக்கேற்ப, நீ நாகபாசத்தின் செயலைக் கண்டு கவலைப்படுதலால், உன் சொரூபத்தை) மறந்தவனாயிருக்கின்றாய். 'இந்த நாகபாசத்தை எந்த தேவன் வந்து இதனை நீங்கச் செய்யானெனில், ஓரம்பினால் முப்புரத்தையும் சாம்பலாக்கிய சிவன்போலத் திரிலோகங்களையும் பொடியாக்கிடுவே'னென்று விபீடணனுக்குச் சொன்னாயாதலால், உன் சொரூபத்தை

மறவாதவனையும் ஒத்திருக்கின்றாய். (இயல்பிலே பற்றற்றிருத்தலால்,) துறந்தவரைப்போன்றிருக்கின்றாய். (நாகபாசத்தாற் கட்டுண்டாரைக்கண் டிரங்குதலால்) துறவாதவரைப்போன்றுமிருக்கின்றாய். அதருமம் மேலிட்டுத் தருமம் தாழ்வுற்றபோதெல்லாம் அதருமத்தைத் தாழ்த்தித் தருமத்தை உயர்த்தி நிலைநிறுத்த அவதரிக்கின்றாயாதலால்) பிறந்தவனும் ஒத்திருக்கின்றாய்; (பிறந்தாலும் சீவர்கள்போலத் தம்வசமற்றுக் கருமவசத்தாற் பிறவாமல், தன் வசத்தனாய், தான்செய்யும் சங்கற்பமே காரணமாகப் பிறத்தலால்) பிறவாதவனும் ஒத்திருக்கின்றாய். (பலபொருள்களை ஒத்தும் ஒவ்வாமலும் உள்ள) இந்த மகாமாயையை யாரே அறிவார்!

சீவர்கள் செய்யும் பாவபுண்ணியங்களுக்கேற்ப, அவர்களுக்குத் தேகம் அளிக்கின்றாய். உன்னைத் தியானிப்பவர்க்கு, அவ்விருவினைகள் பயன்விளையாதபடிசெய்து, அவர்கள் மனத்துள் நினைத்த விருப்பமனைத்தையும் நிறைவேறச் செய்கின்றாய். உன் உண்மைச் சொரூபம் உணரப்படாத தன்மையில், மூடர் முனிவர், தேவர் முதலிய யாவருக்கும் ஒத்திருக்கின்றாய். இந்த மகாமாயையை யாரே அறிவார்!

நாகபாசத்தை யெறிந்த இந்திரசித்தினிடத்தும், எறியுண்ட இலக்குமணன் முதலியோரிடத்தும் இவர்களைக்கண்டு இரங்கும் தேவர் முதலியோரிடத்தும் கலந்திருக்கின்றாய். உண்மையறிவுள்ளார்க்குப் புலப்படுபவனாய், அஃதில்லார்க்குப் புலப்படாதவனாயுள்ளாயாயினும், இருவகையார்க்கும் ஒருபடியாக அந்தரியாமியாக (உள்ளேயுள்ளவனாக) இருக்கின்றாய். இந்த மகாமாயையை யாரே அறிவார்!

பொருள்களெல்லாவற்றிலும் நீங்காமற் கலந்து நிற்கின்றாய். மீன் ஆமை முதலிய அவதாரங்களெடுக்கின்றாய். நீ எந்தப்பிறப்பெடுத்தாலும், அந்தப்பிறப்புடைய உயிர்கள் உன்னைத் தம்மினமெண மயங்குதலன்றி, உன் உண்மைநிலையை உணராதபடியுள்ளாய். எல்லாம் அடங்கிய பிரபஞ்சமே வடிவாவுடையாய். பல தோலடுக்குக்களுள்ள வெண்காந்தட்கிழங்கை, ஒரு தோலுக்குப் பின் ஒருதோலாக, உரித்துரித்துப்பார்த்தால், முடிவினில் ஒன்றும்

இல்லையாதல்போல, உனது பிரபஞ்சவடிவத்தை ஆராய்ந்து பார்த்தால், முடிவில் இல்லையாகின்றாய். இந்த மகாமாயையை யாரே அறிவார். (என்று கருடன் இராமனைத் தோத்திரஞ்செய்தான்)

## கருடன் சமீபிக்க, நாகபாசம் நீங்குதல்.

மேற்கூறியவாறு கருடன் மனமுருகித் தோத்திரித்துக்கொண்டு, இவன் எவனென்றெண்ணி நிமிர்ந்துபார்த்துநிற்கின்ற இராமனிடம் வந்துசேர்ந்தான். அவன் சமீபிக்கவே, சாராமமுதலியார் வாழ்கின்ற வெண்ணெய்நல்லூரை நண்ணிய தமிழ்வித்துவான்கள் வடமொழிவாணர்கள் முதலியோர்களையும் அவர்கள் சுற்றத்தாரையும் துன்புறுத்திக்கொண்டிருந்த பசி தொலைந்தொழிதல்போல இலக்குமணன் முதலியோரைப் பிடித்திருந்த நாகபாசம் நீங்கியது.* பிரளயகாலத்தில் மாண்ட பிராணிகள், பிரளயம் முடிந்தபின் மீண்டும் படைக்கப்பட்டாற்போல, நாகபாசத்தால் வீழ்ந்துகிடந்த வானரர், மீண்டு எழுந்தார்கள். தெய்வம் சன்மார்க்கருக்குச் சகாயம்செய்தலும், துன்மார்க்கருக்குத் துணைசெய்யாமையும்,

---

* வாசம் கலந்த மரைநாள நூலின்
வகையென்பதென்னை ? மழையென்
றாசங்கை கொண்ட கொடைமீளி அண்ணல்
சாராமன் வெண்ணெய் அனுகும்
தேசங் கலந்த மறைவாணர் செஞ்சொல்
அறிவாள ரென்றிம் முதலோர்
பாசங் கலந்த பசிபோ லகன்ற
பதகன் துரந்த உரகம்

மரை - தாமரை. நாளம் - தண்டு. என்னை - என்ன சிறப்பு. மழை - மேகம். ஆசங்கை - சந்தேகம். மீளி - வலிமையுடையான். சாராமன், சடையப்பமுதலியார்தம்பி. தேசம் கலந்த - (பல) தேசங்களிலிருந்த. மறைவாணர் வடமொழிப்புலவரையும், செஞ்சொல் அறிவாளர் தென்மொழி (தமிழ்)ப்புலவரையும் குறித்தன. 'என்றிம் முதலோர்' என்றது, சூத்தர் பாணர் முதலானவர்களை. பாசம் - சுற்றம். பதகன் - பாதகன் - இந்திரசித்து. உரகம் - நாகம் - நாகாத்திரங்கள்.

முறையே, மாளலுற்ற வானரர் மீளலுற்றிடும்படி கருடன்வந்த சம்பவம் நிகழ்ந்தமையும், செத்த அரக்கர்கள் சீவிக்கும்படி யாதொரு சம்பவமும் நிகழாமையும், நிதரிசனமாக விளங்கச்செய்தன. இலக்குமணன்முதலியோர் மேனிகளில் இந்திரசித்து நாகாத்திரங்களால் உண்டாக்கிய வடுக்கள், நல்லார்மேற் பொல்லார் சுமத்திய பழிகள்போல, இருந்த இடந்தெரியாமல் மறைந்தொழிந்தன.

## இராமன் மகிழ்ச்சி.

இலக்குமணன் எழுந்து தொழுதவனை, இராமன், 'இணையார மார்பில்' இறுக அணைத்து, 'தெய்வம், மறைந்து விளைவித்த துயரத்தை வெளிப்பட்டுவந்து விலக்கிய'தென்று வியந்துகூறி, சுற்றம்போன்ற சுக்கிரீவன்முதலிய துணைவர்களைத் தழுவி, எதிரே நின்ற கருடனைநோக்கி இயம்புகின்றான். ]

## இராமன் கருடனுக்கு நன்றிகூறுதல்.

127 ஐயநீ யாரை[1] யெங்க ளருந்தவப் பயத்தின் வந்திங்[2]
எய்தினை யுயிரும் வாழ்வு மீந்தனை யெம்ம ஞேரால்
கையுறை கோடற் கொத்த காட்சியை யல்லை மீட்சி
செய்திற மில்லை[3] யென்றான் தேவர்க்குந் தெரிக்கொ ணாதான்.[4]

கொண்டுகூட்டு: தேவர்க்குந் தெரிக்கொணாதான், 'ஐய! நீ ஆர்? எங்கள் அருந்தவப்பயத்தின் இங்கு வந்து எய்தினை; உயிரும் வாழ்வும் ஈந்தனை. எம்மனோரால் கையுறைகோடற்கொத்த காட்சியையல்லை. மீட்சிசெய்திறம் இல்லை' என்றான்.

பொருள்: (திருமாலின் உண்மைநிலையை - பரநிலையை - தேவர்கள் அறியார்கள். பரநிலை, சுவானுபவத்தால் அறியுந்தன்மையதேயன்றி, அறிந்த ஒருவர் அறியாத ஒருவருக்கு அறிவிக்கக் கூடியதன்று.* ஆதலால், திருமால், தன் உண்மைநிலையைத் தேவருள் யாவரேனும் அறிந்தார்களானால், அவர்கள் மற்றவர்களுக்கு அறிவிக்கமுடியாதவன். அவ்வாறாக,) தேவர்களாலும் தெரிவிக்க ஒண்ணுதவனான (திருமாலின் அவதாரமான) இராமன், (கருடனை

---

* (பரம்பொருளைக்) 'கண்டவர் விண்டிலர்; விண்டவர் கண்டிலர்', என்பது முதுமொழி.

நோக்கி) 'ஐய! நீ யார்? எங்களது அருமையான தவத்தின்பயன் (திரண்டு திவ்வியரூபங்கொண்டுவந்தது)போல (நீ, நாங்கள் இருக்குமிடந்தேடி) இங்கேவந்து (எங்களைச்) சேர்ந்தாய். (நீ வரா விடில், செத்திருக்கக்கடவேமாகிய எங்களுக்கு) உயிரையும் வாழ்வையும் (ஒருங்கே) உதவினாய். (எப்பொருளையும் வேண் டாதவாறு குறைவற்றவனாய்) எம்போலியாது காணிக்கைப் பொருளை ஏற்றுக்கொள்ளுதற்கியைபான தோற்றமுடையவனல் லாதவனாயிருக்கின்றாய். (நீ செய்த பேருபகாரத்திற்குத்தக்க) பிரதியுபகாரம் செய்யும் திறம் எங்களுக்கு இல்லை.' என்று கூறினான்.

'ஆர்' என்பது, 'ஐ' என்னும் அசைநிலையோடுகூடி, 'ஆரை' என வந்தது. பயத்தின் - (1) பயன்போல; (2) பயனால். எம்மனோர் - எம் அன்னோர் - எம்மோடொத்தவர். கையுறை - காணிக்கை. (சிறியார் பெரியாரைக் காணும்போது சமர்ப்பிக்கும்பொருள்). கோடல் - கொள்ளுதல். காட்சியை - தோற்றமுடையாய். அல்லை - அல்லாய். மீட்சி - திருப்புகை. இங்கே, உபகாரம் செய்யப்பெற்றவர் செய்தவர்க்குத் திரும்பச்செய்யும் உபகாரமாகிய பிரதியுபகாரத்தை, ஒரேவார்த்தையால், வெகு சுருக்கமாகவும் பொருத்தமாகவும் தெளிவாகவும் குறிப்பித்த நயம், பாராட்டத்தக்கது.

நீ 'கையுறை கோடற்கொத்த காட்சியையல்லை'; எங்களிடம் 'மீட்சி செய்திறம் இல்லை': ஆதலால், பிரதியுபகாரம் செய்தலும் பெறுதலும் நிகழ வில்லையென்பது குறிப்பு.

பாடபேதம்: [1] யாரே. [2] பயத்தினன்வந்து. [3] இலையால். [4] தெரிக்கிலாதான்.

[ '(தன்னை நோக்கித் தவஞ்செய்வார்க்குத் தெய்வம், எதிரே வந்து, வேண்டும்வரம் அளிக்குமென்பார்கள். எதிர்வரல், வரந்தரல் என்ற இரண்டில் ஒன்றாகிய) உன்வரவால் நாங்கள் அடைந்த பேறு, இது (துன்பமான சாவுநீங்கி இன்பமான வாழ்வுபெறுதல்) ஆனால், உன்வாயால் வரந்தருவாயானால், நாங்கள் அடையக்கூடாத பேறுகளுண்டோ!'* ]

---

* '......வரவின் வந்த வாழ்க்கை ஈதாகின் வாயால்,
அருளினை யென்னின் எய்த அரியன உளவோ ஐயா!'

128 கண்டிலை[1] முன்பு சொல்லக் கேட்டிலை[2] கடனொன் றெம்பாற்[3]
கொண்டிலை[4] கொடுப்ப தல்லாற் குறையிலை யிதுநின் கொள்கை
உண்டிலை யென்ன நின்ற உயிர் தந்த வுதவி யோனே
பண்டிலை நண்பு நாங்கள் செய்வதென் பகர்தி யென்றான்.[5]

கொண்டுகூட்டு: 'உண்டு இ(ல்)லை என்ன நின்ற உயிர் தந்த உதவியோனே!, கடன் ஒன்று எம்பாற் கொண்டிலை. கொடுப்பதல்லால் குறை இலை. இது நின்கொள்கை. பண்டு நண்பு இலை. முன்பு கண்டிலை, சொல்லக் கேட்டிலை. நாங்கள் செய்வது என்? பகர்தி' என்றான்.

பொருள்: 'இருக்கிறதோ, இல்லையோவென்னும்படி (சந்தேகத்துக்கிடமாக) இருந்த (இலக்குமணன் முதலியோர்களுடைய) உயிர்களை உதவிய உபகாரியே!, எங்களிடத்துக் கடனாக யாதொன்றும் கொண்டாயில்லை. (இனிமேல் எப்போதேனும் எங்களிடம் கடன்கொள்ளும்படி நேரலாமேயென்றாலோ, நீ வேண்டுவனவெல்லாம் நிறைவாக உடையனாயிருக்கின்றாய். மற்றவர்களுக்கு)க் கொடுப்பதல்லாமல் (பாரிடத்தும் யாதும் பெறவேண்டிய) குறைவு (உனக்கு) இல்லை. இது (கொடுப்பதன்றிக் கொள்வதில்லையென்பது) உன்கொள்கை. முன்பு, (உனக்கும் எங்களுக்கும்) சினேகம் கிடையாது. (சினேகம் கிடக்க, பழக்கமாவது உண்டோவென்றால், அதுவுமில்லை.) நீ எங்களை முன்பு பார்த்திருக்கமாட்டாய், (யாரேனும்) சொல்லக் கேட்டிருக்கவுமாட்டாய். (இப்படியாக, உனக்கு எங்களோடு எவ்வகைத் தொடர்பும் இல்லாதிருக்கவும், எங்களாலாக வேண்டியது யாதும் இல்லாதிருக்கவும், எல்லா உதவிகளுக்கும் உயர்ந்ததான உயிருதவியைச்செய்தாய். இப்படிப்பட்ட உனக்கு) நாங்கள் செய்யத்தக்க கைம்மாறு யாது? பகர்வாயாக.' (என்றான்)

பண்டு - முற்காலம். நண்பு - சினேகம். செய்வது, சந்தர்ப்பம்பற்றிச் செய்யத்தக்க கைம்மாறு என்ற பொருள்குறித்தது. பகர்தி-சொல்லுவாயாக.

இப்பாட்டு முழுதும், இனிமைமயமாய்க் கம்பரது கவித்துவ சத்தியை இனிது காட்டுவதாக இருக்கின்றது. 'உண்டிலையென்ன நின்ற உயிர்தந்த உதவியோனே' என்ற பகுதி, இப்பாட்டுக்கு உயிர்நிலையாயுள்ளதாய்ப் படிக்குந்தோறும் குறைபாத இன்பங்கொடுப்பதாய், மிகவும் பாராட்டத்தக்கதாயிருக்கின்றது.

பாடபேதம்: [1] கண்டிலம். [2] கேட்டிலம். [3] உம்மாற். [4] கொண்டிலம். [5] என்றார்.

## கருடன் இராமனிடம் விடைபெற்றுச்செல்லுதல்.

[ கருடன், இராமனைநோக்கி, 'நீ கூறியவாறு நான் அன்னியனல்லேன். உறவுடையேனென்பது, இப்போது தெரிவித்தற்கில்லை. இராக்கதசங்காரம் முடிந்தபின் வந்து தெரிவிப்பேன். இப்போது விடைபெற்றுக்கொள்கிறேன்' என்று கூறி, இராமனைப் பிரிந்து சென்றான். ]

129 ஆரிய னவனை நோக்கி யாருயி ருதவி யாதுங்
காரிய மில்லான் போனான் கருணையோர் கடன்மை[1] யீதால்
பேரிய லாளர் செய்கை யூதியம் பிடித்து மென்னார்
மாரியை நோக்கிக் கைம்மா றியற்றுமோ வைய மென்றான்.

கொண்டுகூட்டு: ஆரியன், அவனை நோக்கி, 'யாதும் காரியம் இல்லான் ஆருயிர் உதவிப் போனான். ஈது கருணையோர் கடன்மை. பேரியலாளர் (தம்) செய்கை(யால்) ஊதியம்பிடித்தும் என்னார். மாரியைநோக்கி வையம் கைம்மாறு இயற்றுமோ?' என்றான்.

பொருள்: இராமன், (தன்னிடம் விடைபெற்றுச் செல்வானை) கருடனை(க் கண்ணுக்குத்தெரியாமல் மறையும்வரையும் அன்புடன்) பார்த்துக்கொண்டிருந்து, (அவன் மறைந்தபின், பக்கத்திருந்தவர்களைப் பார்த்து, 'யாராலும் தனக்கு ஆகவேண்டிய) காரியம் யாதுமில்லாதவன், அருமையான உயிரை உதவிவிட்டுப் போய்விட்டான். இஃது—இவ்வாறுசெய்வது—அருளாளர் (கையாளும்) முறை. பெருந்தன்மையுடையோர், (தம் உபகாரச்) செய்கையால் இலாபம்பெறுவோமென்றெண்ணார். (அவர்கள் செயல், 'நிட்காமிய கருமம்' மென்ற பயன்விரும்பாது செய்யும் செயலாம்). அவர்களுக்கு, அவர்களால் உபகாரம்பெற்றவர்கள் பிரதியுபகாரம் செய்தற்கில்லை. (கைம்மாறு கருதாது மழைபெய்து உபகரிக்கும்) மேகத்துக்கு உலகத்தார் பிரதியுபகாரஞ் செய்ய வல்லரோ?' என்றான்.

ஆரியன் - பூசிக்கப்படுபவன்; இராமனைக்குறித்தது. கடன் - முறை. 'முறை', 'முறைமை' யென வரல்போலக் 'கடன்', 'கடன்மை' என வந்தது.

மை, பகுதிப்பொருள்விகுதி. பெருமை இயல் ஆளர் - பெருந்தன்மையுடையார். 'செய்கையால்' எனற்பாலது, ஆல் உருபுதொக்குச் 'செய்கை' யென நின்றது; வேற்றுமைத்தொகை. இதன்முன், 'கண்டிலே' என்ற பாட்டில், சந்தர்ப்பம்பற்றிச் 'செய்வது', 'செய்யும் கைம்மாறு' என்றபொருள் குறித்தது போல, இந்தப் பாட்டில், 'செய்கை', 'உபகாரச்செய்கை'யைக் குறித்தது. ஊதியம் - இலாபம்; பயன் (தமிழகராதி). பிடித்தும் - அடைவோம். பிடித்தல் - அடைதல். பெருகிய செல்வம் நீபிடி (கம்பரா. கிஷ்கிந். 23.) தமிழகராதி. என்னார் - என்றெண்ணார். மாரி - மேகம். கைம்மாறு - பிரதியுபகாரம். கடைசியடி, 'கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டு - என்னாற்றுங் கொல்லோ உலகு' என்ற குறட்கருத்தைத் தழுவியது.

பாடபேதம்: [1] கருமம்; கடமை.

## வானரர் ஆரவாரமும் இராமலக்குமணர் வில்நாண் ஓசையும்.

[ அப்போது, அனுமான், 'இளையபெருமாள் இறந்தானென்று கேட்டு வருந்தும் சீதாதேவி வருத்தமும், மகிழும் இராக்கதர் மகிழ்ச்சியும் நீங்க, நாம் ஆரவாரம் செய்வோமாக' என்றான். இராமன் 'அது செய்யத்தக்கது' என, வானரரெல்லாரும் பெருத்த ஆரவாரம் செய்தார்கள்.

## வானரர் ஆரவாரத்தை இராவணன் கேட்டல்.

அப்போது, சிந்தை சீதையிடம் சென்றுகொண்டிருந்ததனால், (தூக்கம் வரவில்லையாயினும், தூங்கமுயன்று) கண் திறவாமல் மூடியவனாய் (காமாக்கினியால்) தேகம் மிக வெதும்பினவனாய், சிவபிரானது சூலாயுதமும் துளைத்தற்கரிதான வன்மையுடைய மார்பு மன்மதனது மெல்லிய மலரம்பினால் பிளக்கப்பட்டுப் பெருமூச்செறிந்துகொண்டு (படுக்கையிற்) கிடந்த இராவணன், வானரர் வெற்றிமுழக்கத்தைக் கேட்டான்.* கேட்டவன் எழுந்து, இலக்குமணனும் வானரரும் இறந்ததாக இந்திரசித்து கூறியதை நினைந்து இகழ்ச்சியாக நகைத்தான்.

---

* பழிப்பரும் சிந்தை யாள்பாற் சிந்தனை படரக் கண்கள்
விழிப்பிலன் மேனி சால வெதும்பினன் ஈசன் வேலும்
குழிப்பரி தாய மார்பில் மன்மதன் கொற்ற வாளி
கிழிப்புற உயிர்ப்பு வீங்கிக் கிடந்தவாள் அரக்கன் கேட்டான்.

பழிப்பு அரும் சிந்தை - பழிப்பு இல்லாத மனம். படர - செல்ல. கொற்ற வாளி-வெற்றியுடைய அம்பு. உயிர்ப்பு-மூச்சு. வீங்கி-மிகுந்து. வாள்-கொடுமை.

130 இடிக்கின்ற[1] வசனி யென்ன விசைக்கின்ற[2] திராமன் போர்வில்
வெடிக்கின்ற தண்ட மென்னப் படுவது தம்பி வின்னாண்
அடிக்கின்ற தென்னை[3] வந்து செவிதோறு மனும னார்ப்புப்
பிடிக்கின்ற துலக மெங்கும் பரிதிசே யார்ப்பின் பெற்றி.

கொண்டுகூட்டு: *இராமன் போர்வில், இடிக்கின்ற அசனியென்ன இசைக்கின்றது. தம்பி வில்நாண், அண்டம் வெடிக்கின்றதென்னப் படுவது. அனுமன் ஆர்ப்பு, செவிதொறும்வந்து என்னை அடிக்கின்றது. பரிதிசேய் ஆர்ப்பின்பெற்றி, உலகமெங்கும் பிடிக்கின்றது.*

பொருள்: *இராமன் (தெறித்த) வில்(நாண்) ஒலி இடிக்கும் இடிபோல் ஒலிக்கின்றது. இலக்குமணன் (தெறித்த) வில்நாண், (ஓசை), அண்டகோளம் வெடிக்கின்றதோ வென்னும்படி தொனிக்கின்றது. அனுமன் ஆரவாரம், என்காதுதோறும் (இருபது காதுகளிலும்) வந்து என்னை அடி(த்தாற்போல) ஒலிக்கின்றது. சுக்கிரீவன் முழக்கம், உலகமுழுதும் பரவுகின்றது.*

*அசனி - இடி. இசைத்தல் - ஒலித்தல். வில், வில்நாணுக்காகி, நாணின் ஒலிக்காகியது; இருமடியாகுபெயர். படுதல் - ஒலித்தல். 'படுகண்முரசம்' (பதிற்றுப் 49, 14) தமிழகராதி. ஆர்த்தல் - ஒலித்தல். பரிதிசேய் - சூரியன் குமாரன் - சுக்கிரீவன். பெற்றி - தன்மை.*

பாடபேதம்: [1] *இடிக்கின்றது.* [2] *இசைக்கின்ற, விசைக்கின்ற.* [3] *என்ன.*

[ *'அங்கதன் நீலன் முதலிய வானரத்தலைவர் ஆரவாரிப்பு இந்த அண்டத்துக்கப்பாலும் சென்றது'. என்று சொல்லிப் படுக்கைவிட்டெழுந்தான் (இராவணன்).*

## இராவணன் இந்திரசித்துமாளிகைக்கு ஏகுதல்.

*எழுந்தவன், வாளேந்திய கையினராய் ஒன்பதுகோடி அரக்கர் மெய்காவலராகச் சூழ்ந்துவர, ஒருகோடி மாதர் பொன்விளக்கேந்திச் செல்ல, இந்திரசித்தின்மாளிகைக்குப் போனான்.*

## இராவணனுடன்சென்ற மாதர் வருணனை.

கொடி (தோற்றுப்) பின்வாங்கிய (துவட்சியும் நுணுக்கமுமுள்ள) இடைகளையுடையாரான மாதர்கள், (அவிழ்ந்திருத்தலால்

கையினால்) தாங்கப்பட்ட சேலையுடையாரும், (முடிக்கப்படாதிருந்ததனால்) சரிந்துவிழுகின்ற கூந்தலுடையாரும், அடங்கியிருந்து மிகுதியாக வெளிப்படுகின்ற பெருமூச்சுடையாரும், பெரிய தனங்களையுடையாரும், அரைகுறையாகத் தூங்கிய கண்களுடையாரும், தள்ளாடித் தடுமாறிய நடையுடையாருமாகத் தூக்கமயக்கத்துடன் இராவணனுடன் (இந்திரசித்துமாளிகைக்குச்) சென்றார்கள்.*

அந்த மாதர்கள், மதுபானமயக்கத்தாலும், இடையிலெழுப்பப்பட்ட தூக்கமயக்கத்தாலும் தாங்கள் கூட்டமாக (இராவணன்புகழ்) பாடும் பாடற்பரவசத்தாலும் தள்ளாடிக்கொண்டு கண்கள் மூடுவதும் திறப்பதுமாகச் சென்றார்கள்.

சீதைகலக்கத்தையும் இராக்கதர்களிப்பையும் நீக்கத்தொடங்கிய வானரர்பேரொலியால், இராக்கதர் சிங்ககருச்சனைகேட்ட யானைகளையும், அவர் மாதர்கள் இடியோசைகேட்ட நாகங்களையும் போன்று நடுங்கினார்கள்.

இராவணன், இந்திரசித்தின் அரண்மனையை அடைந்தான்.

## இராவணன் இந்திரசித்தைக் கண்டு பேசுதல்.

அடைந்தவன், இலக்குமணனம்புதைத்தபுண்களில் இரத்தக்குமிழி கொப்புளிக்க, சிங்கத்தால் அடியுண்டு சாய்ந்துகிடக்கும் யானைபோல, வேதனையோடு படுக்கையிற்கிடந்த மகனைக் கண்டான். அவன், எழுந்துவணங்க வலாதவனாய்ப் படுத்திருந்தபடியே, கைகளைத் தலையிற் சேர்த்துத் தொழுதலைக் கண்டு, இராவணன், திடுக்கிட்டு, 'நீ, மிகவும் வருந்தினாய்! என்னதிங்கு நேர்ந்தது?

* தாங்கிய துகிலார், மெள்ளச் சரிந்துவீழ் குழலார், தாங்கி
வீங்கிய உயிர்ப்பார், விண்ணை விழுங்கிய முலையார் மெல்லத்
தூங்கிய விழியார், தள்ளித் துளங்கிய நடையார், வல்லி
வாங்கிய மருங்குல் மாதர், அனந்தரால் மயங்கி வந்தார்.

துகில் - ஆடை. குழல் - கூந்தல். வீங்குதல் - மிகுதல். உயிர்ப்பு - மூச்சு. விண்ணைவிழுங்கிய, மிகப்பெரிய என்ற பொருள் குறித்தது. விழி - கண். வல்லி - கொடி. மருங்குல் - இடை. அனந்தர் - தூக்கம்.

என்னதீங்கு நேர்ந்தது?' என்று பலமுறை வினவினான். இந்திரசித்து, 'இலக்குமணனுடைய எண்ணிறந்த அம்புகள், எனது மார்பை ஊடுருவிச் சென்றன. இரத்தத்தை வற்றச்செய்தன. மிகவும் சோர்வுற்றேன். என்கண்கள் கருவிழி மறையச் சொருக லுற்றன. மாயையினால் மறைந்து போர்க்களத்தைவிட்டுப் போகாதிருந்தேனானால், இறந்தேயிருப்பேன். இந்திரன், சிவன், திருமால் முதலியோரோடு பொருத போர்களில் சிறிதும் நொந்தேனில்லை. தேவர், அசுரர், இராக்கதர் எல்லாரினும் வலிமைகுறைந்தவரென நாம் எண்ணியிருந்த மனிதவகுப்பைச் சேர்ந்த இலக்குமணனது வல்லமைக்கு எல்லையில்லை. இராமன் திறமோ, செப்புந்தரமன்று. மேல்விளைவதைப் பார்த்துத்தான் தெரியவேண்டுமேயன்றி, வெற்றியே நமக்குண்டாகுமென்று எண்ணுதல் தகாது. இலக்குமணனையும் வானரரையும் நான் கொன்றது, மாயையாலும் நாகபாசத்தினாலுமே, (அவர்கள் நேர்நேராகப் பொருத போரிலே கொல்லப்படவில்லை.) இன்னும் இராமனொருவன் இறவாமல் எஞ்சியிருக்கின்றான்' என்று கூறினான்.

இராவணன், 'அப்பா! நீ செத்தாரென எண்ணியிருக்கும் இலக்குமணனும் வானரரும் செய்த வில்நாணொலியையும் வீர ஆரவாரத்தையும் கேட்டாயில்லைபோலும்' என, இந்திரசித்து, 'அவர்கள் நான் எய்த நாகாஸ்திரங்களால் கட்டுண்டும் வெட்டுண்டும் உணர்ச்சிநீங்கிக் கிடந்தார்கள். அவர்கள் பிழைத்திருக்கிறார்களென்று நீ சொல்வது உண்மைதானோ? "என் கண்ணை நம்பவா? உன் காதை நம்பவா?" நாகபாசம் அழிக்கக்கூடாதது. அழிக்கக்கூடுமெனில், அதைக் கொடுத்த தெய்வம் சிறுமைப்பட்டுவிடும்* என்று கூறினான்.†

---

* நாகபாசத்தைக் கொடுத்தது மகாதேவனாதலால், அது, சிறுதெய்வங்களால் கொடுக்கப்படும் ஆயுதங்கள்போலச் சிதைக்கமுடியாதென்றபடி.

† 'என் கண்ணை நம்பவா? உன் காதை நம்பவா? என்ற இந்திரசித்தின் வினாவுக்கு, இராவணன் விடையிறுக்கவேண்டிய தற்சமயத்தில், நாடக நிகழ்ச்சியாகத் தூதரை வரச்செய்து, அவர்களால் இந்திரசித்தின் சந்தேகத்தை நன்கு தெளிவித்த கவிசாதுரியம் கண்டுகளித்துப் பாராட்டத்தக்கது.

## யோர்க்களம் போய்வந்த தூதர் அறிக்கை.

அப்போது, நிகழ்ந்ததைத் தெரிந்துவரும்படி இராவணன் விடுத்த தூதர்கள் வந்து அடிபணிய, 'அங்கே நடந்தது யாது'? என, 'நாகபாசத்தால் கட்டப்பட்டுக் கிடந்தவர்களை நடுராத்திரியில், இராமன் அடைந்து, பார்த்தோர் (இவன் மனத்திடம் இது தானோவென்று) பரிகசிக்கும்படி அலறி அழுதான். துக்கமிக்கவன், கோபமிக்கவனாகி, 'உலகத்தை ஒழிப்பே'னென்றான். அப்போது, (உலகம் அழிந்துவிடாதபடி தடுக்கவந்தவன்போலக்) கருடன் வந்தான். அவன் வரவே, இலக்குமணன் முதலோரைக் கட்டியிருந்த நாகங்களெல்லாம் சின்னபின்னமாயின. அவைகள் கடித்தபுண்களெல்லாம் மறைந்தன. அவைகளாற் கட்டப்பட்டிருந்த வீரரெல்லாரும், சோர்வுநீங்கியதேயன்றி, முன்னையிலும் வலியராயினார்' என்றார்.

## இராவணன் கருடனைப்பற்றிக் கோபமும் தாபமுங் கொண்டு கூறல்.

தூதர் சொன்னதைக்கேட்ட இராவணன், 'என்மகன் பிரயோகித்த நாகபாசத்தைக் கருடன் தன்சிறகுக்காற்றினால் நீக்கியொழித்தானாம். இராவணனார் வாழ்ந்த வாழ்க்கை மிக நன்றாயிருந்தது. என் முயற்சி (இளமைநீங்கி) மூப்படைந்ததுபோலும். (இந்தக் கருடனை ஏறிநடத்தும்) திருமால், என்னுடன் எதிர்த்துச்செய்த போரிலதோற்று, என்னால் தொடரப்பட்டபோது, முதுகுகாட்டி உலகெங்கும் ஓடியபோதும், கடலுக்குள் ஒளித்தபோதும், இந்தக் கருடன் என்னைக் காணவில்லைபோலும். அந்தக்காலத்தில் என்வில்லினின்று புறப்பட்டு மார்பிலும் தோளிலும் முதுகிலும் சிறகிலும் தைத்த அம்புகள் (செய்த புண்களின் வடுக்கள் மறையாமல்) நிலைத்திருக்கவும், (அவைகளைப் பார்த்து என்னைப் பகைத்தல் அபாயமென்றுணராதாய் எனக்கு விரோதமாக இராமனுக்கு உதவிசெய்ய) வந்திருக்கின்றான்'. என்றுகூறிப் பின்னும் கூறுகின்றான்:—

## இராவணன் இந்திரசித்தைத் திரும்பப் போர்புரியச்சொல்லித் தன்மாளிகைக்குத் திரும்புதல்.

'கருடன்செய்கை கடந்துபோனது. அது கிடக்க. அவனால் உயிர்தப்பிப்பிழைத்தவர்களைத் திரும்பக் கொல்லல்வேண்டும். அதற்கு, நீ மீண்டும் போர்க்குப்போதல்வேண்டும்', என, இந்திரசித்து, 'இன்று இளைப்பாறி நாளைப்போய்ப் பிரமாத்திரத்தினால் எதிரிகளைக்கொன்று உன் மனத்துயரத்தை மாற்றுவேன்' என்று சொன்னான். இராவணன், தன்மாளிகைக்குத் திரும்பிப்போனான்.]

நாகபாசப்படலம் முற்றிற்று.

[தொடரும்]

வெ. ப. சுப்பிரமணியமுதலியார்.

# யவனர்வரலாறு.

[ஸ்ரீ. த. இராமநாதபிள்ளை B.A., (LOND.) அவர்கள்.]

[சசுஉ-ஆம் பக்கத் தொடர்ச்சி.]

## 14-ஆம் அதிகாரம்.

### அராபியர்.

பார்த்தியரும் உரோமரும் பொருது இளைத்தனராகச் சரசினர் என்னும் அராபியர் தலையெடுத்தனர். அராபியா மணற்காடாயிருந்தது. நீரூற்றுக்கள் உள்ள இடங்களில் அராபியர் சிறுசிறு கூட்டம் கூட்டமாக வாழ்ந்தனர். பட்டிமேய்த்தலும் மீன்படுத்தலும் அராபியரின்தொழில். சுரநிலவாழ்க்கைக்கெனப் படைக்கப்பட்ட மிருகம் ஒட்டகமே. அதன் உணவு வறைந்தரத்திலுள்ள முட்செடிகளே. அராபியர் ஒட்டகப்பாலை அருந்தினர்; அதன் சலத்திலிருந்து உப்பு விளைத்தனர்; அதன் சாணத்தை விறகாக உபயோகித்தனர்; ஆண்டுக்கொருமுறை உதிரும் அதன் மயிரை எடுத்து ஆடைநெய்தனர். பெண்களே ஒட்டகங்களை வளர்த்தனர். ஆடவர் குதிரையேற்றமும் வில்வித்தையும் நனிபயின்றனர். அராபியர் வளர்த்த குதிரைகளே திறமானவை. அராபியர் சுரநிலங்களில் வாழ்ந்தனராகலின், வழிபறித்தலையும் சூறையாடலையும் தம் தொழிலாகக்கொண்டனர். அராபியர் சிலர் வாணிகஞ்செய்தும் பொருளீட்டினர். அராபியருடைய பிரதானமான நகரங்கள் மக்கா மடீனு என்னும் இரண்டுமே. எமன் என்னும் அராபிநாடு ஆதியில் பார்சியரால் ஆளப்பட்டது. எமன்தேசத்தவரைப் பார்சியர் சரசினர் என அழைத்தனர். அராபிமொழி சீர்திருந்தியதன்றெனினும், கானவரின்மொழிகளுள் சிறந்ததெனப்படும். அராபியர் பண்டு சூரியசந்திரரை வணங்கினர்.

முகம்மதுநபி என்பவரின் பாட்டன் கப்பா என்னும் பெருங் கல்லேயுடைய கோவில்பூசகனுக அமர்ந்திருந்தான். அக்கோயில் 360 படிமங்களை உடையது. அவற்றுள் சிறந்தது கப்பா என்னும் கல். அக்கல்லேச்சூழ்ந்திருக்கும் படிமங்கள் சில மனித உருவங்கள்; சில கழுகு சிங்கம் முதலியவற்றின் உருவங்கள். கி. பி. ஏழாம் நூற்ருண்டில் அராபியர் முகம்மதுநபி போதித்த மதத்தைத் தழுவினர். முகம்மதுவின்பாட்டன் அப்துல் மட்டலீபு என்பவன், கஷேம் என்னும் வணிகச்செல்வனின்மகனுவன். முகம்மதுவின் பாட்டனுக்கு ஆறு பெண்குழந்தைகளும் 13 ஆண்குழந்தைகளும் பிறந்தன. அவனுடைய இஷ்டபுத்திரன் அப்துல்லா என்பவருக்கு அருந்தவப்புதல்வராகப் பிறந்தார் முகம்மது. முகம்மதுவின் தோற்றம் உரோமருடைய ஆழிவேந்தன் யஸ்தினியன் இறந்தபின் நாலாமாண்டில் நிகழ்ந்தது. முகம்மது இளவயதிலேயே பெற்ருேரை இழந்து அநாதையானுர். முகம்மதுவின் ஆஸ்தி ஐந்து ஒட்டகமே. முகம்மது தன் 25-ஆம் ஆண்டில் கடிசா என்னும் விதவைச் செல்வியின் ஒட்டகங்களை மேய்த்தார். அதற்குப்பிரதியாக அப்பெண் முகம்மதுவுக்குத் தன்பொருளை அளித்ததுமன்றித் தானும் இல்லாளாக இயைந்தாள். முகம்மது அவளுக்கு முக்கால்நிறை பொன்னும் இருபது ஒட்டகமும் சீதனமாகக் கொடுத்தார். முகம்மது கம்பீரமான உருவினர்; நீண்ட தாடியர்; எழுத வாசிக்கத் தெரியாதவராயிருந்தும் தமது நாவல்லமையால் மனிதரை வசீகரப்படுத்தினுர். தேர்தலாலும் சம்பாவனையாலும், தியானத்தாலும் தம் அறிவை வளர்த்தார். இரம்சான் (கார்த்திகை) மாதத்தில் முகம்மது, கிர என்னும் முழையில் தனித்திருந்து தியானம் செய்வர். அம்முழை மக்காவிலிருந்து 3 மைல் தூரத்திலிருந்தது.

அல்லா என்னும் ஒரே ஒரு தெய்வம் உண்டெனவும் முகம்மதுவே அல்லாவின் உபதேசகர் எனவும் முகம்மதியர் நம்புகின்றனர். ஏழாம்நூற்ருண்டுக் கிறீஸ்தவர் படிமவழிபாடு செய்யத்தொடங்கிப் பலதேவர்களையும் வணங்கியகாலத்தில் முகம்மது கடவுளொன்றெனவும் படிமவழிபாடு குற்றமுடையதெனவும் வற்புறுத்தினர். முகம்மது ஆதாம், நோவா, ஆபிரகாம், மோசஸ் என்னும் யூதருடைய மூதாதையரைக் கடவுள் புரந்தனரென நம்பினர்.

குருன் என்னும் முகம்மதிய சமயநூல் சுயம்புவானது எனவும் அது அநாதியாயுள்ளது எனவும் முகம்மதுதான் கடவுளின் கடைசித் தீர்க்கதரிசி எனவும் முகம்மதுவும் முகம்மதியரும் மொழிகின்றனர். இடையிடையே முகம்மது உபதேசஞ்செய்தனவாக வின்பிற்காலத்தில் உபதேசித்தவைகளே அவற்றின்முன் உரைக்கப்பட்டவற்றிலும் பிரமாணமாகும். முகம்மது இறந்தபின் அபுபக்கர் குருன் நூலைத் தொகுத்து வெளியிட்டனர். முகம்மதுவின் உபதேசங்களைக் கேட்க மரங்கள் புடைபெயர்ந்தன எனவும், முகம்மது பசித்தோர் எண்ணிறந்தவராயினும், உணவளித்தாரெனவும் இறந்தோர்பலரை உயிர்ப்பித்தாரெனவும் முகம்மதுவின்சீடர் மொழிந்தனர். முகம்மது கனக்கண்டெழுந்து மக்காவிலிருந்து எரிசலம் நகருக்குப் பிரயாணஞ்செய்து ஏழாஞ்சுவர்க்கத்தை நண்ணிக் கடவுளால் ஆசீர்வதிக்கப்பட்டுத் திரும்பினரெனவும் ஒரு கதையை அவர் சீடர் சிருட்டித்தனர். முகம்மது செப தபம் செய்வதில் விருப்பமுடையவர் என்பதில் ஐயமில்லை.

வெள்ளிக்கிழமைதோறும் முகம்மதியர் திரண்டு கடவுளை வழிபடுவர். ரம்சான்மாதத்தில் முப்பதுநாளும் பொழுதுபுலருமுன் எழுந்து பொழுதுபடுமளவும் உண்ணுவிரதங் காப்பர். முகம்மதியர் மதுபானஞ் செய்யக்கூடாதெனவும் தம் தேட்டத்தில் பத்திலொருபங்கைத் தருமங்களிற் செலவுசெய்யவேண்டுமெனவும் முகம்மது கற்பித்தனர். உலகு ஒடுங்கும் கடைசிநாளில் ஒவ்வொருவரும் தத்தம் பாவத்திற்கேற்பத் தண்டிக்கப்படுவரென முகம்மதியநூல் நுவல்கின்றது. அறஞ்செய்வோர் சுவர்க்கமடைந்து, பைங்காவினுள் உலாவியும், முத்துமாளிகைகளிற் துயின்றும் உவைன்குடித்தும் கருங்கண்ணினையுடைய தேவரம்பையர் எழுபத்திருவரொடு இன்புற்றிருப்பராம். ஆண் பெண் இருபாலாரும் சுவர்க்கம் சேரலாம். அஞ்ஞானிகளும் பாசாங்குக்காரரும் நரகில் வீழ்த்தப்படுவர்.

கி. பி. 609-ல் முகம்மது தன் மனைவியையும் மாணுக்கனையும் அடிமையையும் நண்பனையும் தன்மார்க்கத்திற்குத் திருப்பினர். மனைவி கடிசா உண்மையாக நம்பினள். மாணவன் ஆலி ஆசிரியனைப்

பின்பற்றினன். சைத்து என்னும் அடிமை சுவாதீனம்பெறும் நோக்கமாக உபதேசங்களைக் கேட்டிருக்கலாம். நண்பன் அபுபக்கர் மக்காநகரில் பதின்மரை முகம்மதியமார்க்கத்தில் சேர்த்தான்.

தேசியத் தெய்வங்களை முகம்மது பழித்துரைத்தனரென அராபியர் வெகுண்டு முகம்மதுவுக்குக் கொலைத்தண்டனை விதித்தனராம். கி. பி. 622-ல் தேவதூதன் ஒருவனால் தன்விதியை உணர்ந்து முகம்மது அபுபக்கரொடு மக்காவிலிருந்து மடினாவுக்கு ஓடித் தப்பினார். மடினாவில் 73 ஆடவரையும் இரண்டு பெண்களையும் தம் மார்க்கத்திற் சேர்த்தார். அவர்களொடு தாம் இறக்குந்துணையும் வாழ்வதாகவும், அவர்களைத் தாம் புரப்பதாகவும் வாக்குப்பண்ணிப் புறநகரில் இருந்தார். கையிற்* குடைபிடித்துப் பெண் ஒட்டகத்தின்மீதேறித் தம் தலைப்பாகையை அவிழ்த்துக் கொடியாகப் பாவித்து நகருட்புகுந்தனராக, 500 சனங்கள் முகம்மதுவை வணங்கினராம். ஆறுவருடஞ்சென்றபின், கி. பி. 628-ல் 1500 மக்கள் முகம்மதியராயினர். முகம்மது ஒன்பதுமுறை போர்புரிந்தார்.

அபுசபியன் என்னும் வணிகனை வழிபறித்தற்கு முதற்போரும், படிமவழிபாட்டைத் தொலைத்தற்கு இரண்டாம்போரும் நடாத்தப்பட்டன. இரண்டாம்போரில் முகம்மது காயப்பட்டு இரண்டு பற்களை இழந்தார். பின்பு யூதரொடு பொருது வென்றார். யூதநகராகிய சோபர் முகம்மதியர்வசமாயிற்று.

யூதரை ஓமார் என்னும் தலைவன் சிரியாதேசத்திற்கு அழைத்துச்சென்றனன். முகம்மதியர் அராபியரொடு சமாதானஞ் செய்துகொண்டு கப்பாக்கோயிலிலும் மக்காவிலும் தொழும் உரிமையைப்பெற்றார். கி. பி. 629-ல் முகம்மது 10 000 வீரரோடுசென்று மக்காநகரைப் பிடித்து ஆண்டார். கட்சிகளை ஒற்றுமைப்படுத்தியபின் கோயில்களை உடைத்தார். கமயின் களத்தில் போர்புரிந்தபின் ரேயிவுநகரைப் பிடித்தார். அங்கு அகப்பட்ட சூறை 6000 வீரர், 24,000 ஒட்டகம், 40,000 செம்மறிகள், 4000 வெண்காசு. இப்போர் அடிமை சயித்து என்பவனின் தலைமையில் நிகழ்ந்தது. போர்முடிவில் சயித்து இறந்தான். முகம்மது உரோமர்வேந்தன் காரக்ளியனோடு நட்புக் கொண்டாடினார். சொற்பகாலம் சென்ற

பின் பகைத்துப் போர்முரசறைந்தார். முடிவில் சமாதானம் ஏற்பட்டது. 63-ஆம் வயதில் முகம்மது அபுபக்கரின்மகளும் தன் இஷ்ட மனைவியுமாகிய அயேஷா என்பவளின் மடியில் தூஞ்சிப் பரலோக மடைந்தார். முகம்மதுவின் உடல் மடிநாவிலே அடக்கஞ்செய்யப் பட்டது. இக்காலத்து முகம்மதியரும் மெக்கா மடிநாவுக்கு யாத்திரைசெய்தால்தான் பரகதியடையலாமென நம்புகின்றனர்.

முகம்மது தம் 40-ஆம் வயதில் தாம் தேவனுடைய தீர்க்க தரிசியெனக் கூறினர். முகம்மது ஆடம்பரவாழ்க்கையை விரும்பின ரல்லர். பல மனைவியரை விவாகஞ்செய்யும் காலத்தில் முகம்மது நாலுமனைவியருக்குமேல் அதிகமாக மணஞ்செய்யப்படாதெனக் கட்டளையிட்டார். அவருடைய முதல் மனைவி கடிஷாவுக்கு நாலு ஆண்குழந்தைகள் பிறந்து இறந்தன. மேரி என்னும் எகிப்திய மனைவிக்கும் ஒரு ஆண்குழவி பிறந்து இறந்தது. முகம்மதுவின் மகள் பற்றீமா அபுதலிப்பின் மகன் ஆலியென்பவனை மணந்தாள்.

## காலிவ்வேந்தர்.

அராபிய முகமதியர் அயல்நாடுகளை வென்று தம் ஆட்சியைச் செலுத்திப் பெரிய இராச்சியத்தை நடாத்தினர். அராபிய ஆழி வேந்தர் காலிபு என்னும் பட்டப்பெயர் பெற்றனர். அவர்களுடைய தலைநகர் பாக்தாது; அவர்களுள் தலைசிறந்தோன் கரன்அல்ருஸ்சித்து; அவன்தொடர்பாகவே அராபிக்கதை என்னும் புனைகதைகள் எழுதப்பட்டன. இது நிற்க.

கி. பி. 632-ல் அபுபக்கரைத் தலைவனென ஓமார் வணங்கினுன். அபுபக்கர் 634-ல் இறந்தானுகை, ஓமார் முகம்மதியருடைய அரசற்குரிய காலிபுப் பட்டத்தை எய்தினுன். ஓமாரைத் தீயோனெருவன் கொல்ல ஒதுமான் அரசனுனன். ஆலி அரசு தனக்கே உரிய தெனக் கலாம்விளைத்தான். ஆலியைச் சந்தானகுரவரில் ஒருவ ரென நம்பும் கட்சியினர் ஷீயரெனவும் ஓமாரின் கட்சியார் சொன்னியரெனவும் சொல்லப்படுவர். அயேஷாவின் சகோதர னெருவன் கி. பி. 655-ஆம் ஆண்டு ஒதுமனைக் கொன்றுன். பின்பு ஆலி அரசுகட்டிலேறினுகை, அயேஷாவின் தலைமையில் ஒதுமன் கட்சியார் பகைத்தெழுந்தனர். ஆலி அவர்களை அடக்கினுன். அபு சபியனனின்மகன் சிரியருடைய துணைப்படையோடு எதிர்த்தானுகை,

அவனையும் வென்றான். ஆலியும் அபுசபியனின்மகனாகிய மோகவியாவும் எகிப்தை யாண்ட அமுருவும் கலகப்பட்டனராதலின், தீவினையாளர் மூவர் அவர் மூவரையும் கொல்ல எண்ணினர். அமுருவின் அமைச்சனை அமுரு என மயங்கிக் கொன்றார்கள். மோகவியா ஓடித் தப்பினான். ஆலி கொல்லப்பட்டான். மோகவியா சிரியா தேசத்தை ஆண்டான். அவன்பின் அவன் மகன் எசித்து அரசனானான். மோகவியா ஆலியின் மகன் கசன் என்பவனை அரசைத் துறக்கப்பண்ணினன். கூபாவை ஆண்ட ஒபியதுல்லா கசனுடைய சகோதரனாகிய ஹுசேயினைக் கொன்றான். ஆலியும் அவன் சந்ததியாரும் சமயகுரவராயினர். 12-வது குரவன் வழிகாட்டியென்னும் பட்டம் பெற்றான். முகம்மதியசமயம் கிரியைகளைக் கண்டித்தமையால் கத்தோலிக்கரும் பிறரும் முகம்மதுசமயத்தைத் தூற்றினர். பாசாங்குக்காரர் பலர் தாம் அல்லாவின் தீர்க்கதரிசிகளென எழுந்தனர். கி. பி. 632-ல் அபுபக்கர் இப்பாசாங்குக்காரரைத் தொலைத்தான். மசீலாமாதன் ஒரு தீர்க்கதரிசியென எழுந்தான். தலைவன் கலட்டு 40000 முஸ்லீம் வீரரோடு புறப்பட்டு எதிரிகள் யாவரையும் புடைத்தான். கலட்டு அஞ்ஞானிகள் பலரைக் கொன்றான். பார்சியருடைய நகர் இரண்டைப் பிடித்தபின் சிரியாநாடு புக்கான். கி. பி. 636-ல் பார்சியவேந்தனைக் கடிசியாக்களத்தில் வென்றான். அராபியருடைய படை பெரும்பாலும் குதிரைப்படையும் விற்படையுமே.

சாயித்து என்னும் தலைவன் பர்சியத்தலைநகராகிய ரசிபனைப் பாழாக்கினான், ஒக்சஸ்நதி பாயும் துருக்கநாடுவரையும் தன் ஆட்சியைச் செலுத்தினான். கற்றீபா என்பான் துருக்கரை அப்பாலும் துரத்தினான். அபுபக்கர் சிரியாநாடு புக்கு மரங்களை வெட்டாதீர்கள், மாடுகளைக் கொல்லாதீர்கள், விரோதிகளைத் தேடிக் கொல்லுங்கள் எனத் தன் வீரருக்குக் கட்டளையிட்டான். கி. பி. 633-ல் கராக்கிளியன் என்னும் உரோமர்தனிக்கோலன் 70000 தொகையிற் படையொன்று திரட்டி முகம்மதியரோடு போர் செய்யும்படி பணித்தனன். அப்பெரும்படையைக் கலட்டு வென்றான். ஜாபர் மகன் அப்துல்லா கி. பி. 636-ல் உரோமரை யமருக்கு என்னும் களத்தில் வென்றான். ஓமார் எரிசலம்நகரைப் பிடித்தான். அதனுடன் உரோமருடைய நாடாகிய சிரியாநாடு

அராபியர்வசமாயிற்று. கி. பி. 638-ல் அமுரு எகிப்தைக் கைப்பற்றினன், படைவீரர் அலெச்சாந்திரியாவிலுள்ள நூல்நிலையத்தில் தீயிடலாமோ எனக் கேட்டபோது முகம்மதிய ஆழிவேந்தன் ஓமார் சொன்ன மறுமொழி வருமாறு:- "அந்நூல்கள் நவலும்பொருள் குரான் கிளக்கும் பொருளொடு பொருந்தியவையாயின் அவை மிகையாகும்; பொருந்தாதவையாயின், அவை பொய்யாகும்" என்பது. நூல்நிலையம் எரிவாய்ப்பட்டது.

சயித்தின் மகன் அப்துல்லா 20000 சாரசினவீரரைத் திரட்டி ஆபிரிக்கநாடு சென்று உரோமதேசாதிபதிகள் திறைகொடுக்க வேண்டுமெனவும் முகம்மதியசமயத்தைத் தழுவவேண்டுமெனவும் முரசறைந்தான். தேசாதிபதி கிரக்கரி போரில் புகழ்பெறும் வீரனுக்குத் தன் மகளை அளிப்பதாக மொழிந்தனன். அவனும் அவன் மகளும் முன்னணியில் நின்று பொருதனர். அப்துல்லா முதுகிட்டுப் பின்னர் உரோமரை வென்றான். கி. பி. 665-ல் அக்பார் 10000 வீரரோடு சிரியாநாட்டினின்று புலம் பெயர்ந்து ஆபிரிக்கநாடுகளைக் கடந்து அத்லாந்திக் சமுத்திரக்கரையை அணுகினன். பின்பு கி. பி. 692-ல் எகிப்திய அரசன் கசன் உரோமரை வென்று காதாக்கோப்பட்டினத்தைப் பிடித்தான்.

கதீஞ என்னும் அரசியின் தலைமையில் மேலாபிரிக்கநாடுகளில் வசித்த மூர்கள் அராபியரோடு பொருதனர். அந்நாடுகளில் வசித்த கத்தோலிக்கர் மூரின் கொடுங்கோலினும் அராபியரின் ஆட்சியே திறமானதென எண்ணி நொதுமலாயிருந்தனர். பிற்காலங்களில் இம்மூர்கள் முகம்மதியராயினர்.

ஸ்பானியர் தம்முட் கலகப்பட்டனர். யூலியன் என்னும் ஓர் குறுநிலமன்னன் அராபியரிடம் துணைவேண்டினன். கி. பி. 711-ல் தரிக்கு என்னும் அராபி ஸ்பெயினில் இறங்கி யூதருடைய துணையோடு ஸ்பானியரை அடக்கி ஆண்டான். மூசா என்னும் முகம்மதியத் தலைவனும் தரிக்கு என்னும் தலைவனும் கலகப்பட்டனர். மூசா ஐரோப்பியதேசங்கள் யாவற்றையும் ஒருகுடைக்கீழ் ஆள எண்ணினன். முகம்மதியருடைய ஆழிவேந்தன் மூசாவைப் போர் தொடங்கவேண்டாமெனப் பணித்தனன். மூசா ஸ்பானியகுறுநில மன்னனொருவன்மகளை மணந்தான். அதைக் கேள்வியுற்ற

முகம்மதியவேந்தன் அவனை மக்காவுக்குத் திரும்பும்படி கட்டளையிட்டான். ஸ்பெயின்தேசம் முகம்மதியரின் ஆட்சியில் தலையோங்கி வளர்ந்தது. முகம்மதியராட்சி மூன்றுநூற்றாண்டுகள் நிலைத்தது. அக்காலத்தில் கமக்காரரும் வணிகரும் செல்வராயினர். அடிமைகள் முகம்மதியரானவுடன் தம் எசமானனுடன், சமத்துவமாயிருக்கும் உரிமையைப் பெற்றனர். முகம்மதியசமயம் யாவருக்கும் சமத்துவம் அளித்தது. ஸ்பெயின்தேசத்திலுள்ள கிறிஸ்தவரை முகம்மதியர் துன்புறுத்தவில்லை.

கி. பி. 668-ல் மோகவியா இளங்கோ யசித்தையும் சபியன் என்னும் ஓர் தலைவனையும் கன்ஸ்ராந்தினப்பிள் என்னும் தலைநகரைத் தாக்கும்படி ஏவினன். அராபிக்கப்பல்கள் பட்டினத்தை அணுகின. பட்டினத்தின் மதில்கள் பொறிகளால் காவல் செய்யப்பட்டிருந்தமையால் அராபியர் பட்டினத்தைத் தாக்காது நாடுநகரங்களில் சூறைகொண்டனர். பின்பு ஆறுவருடம்வரை தலைநகரை இடையிடையே தாக்கினர். அப்போர்களில் 30,000 முகம்மதியர்கள் இறந்தனர்.

ஓமையா குடும்பத்தினர் சிரியாதேசத்தையும் எகிப்தையும் ஆண்டனர். அக்காலத்து முகம்மதியர் நாணயங்கள்மூலமாகவே கொடுக்கல்வாங்கல் செய்தனர். அராபியாதேசத்தில் எழுத்துக்கணிதமும் வடிவக்கணிதமும் பயிலப்பட்டன. வேந்தன் வாலட்டு சிரியாவை ஆண்டனன். அவனுடையவீரர் ஸ்பெயினைக் கைப்பற்றினர். தலைவன் மஸ்லீமா 120000 படைவீரரோடு கன்ஸ்ராந்தினப்பிள்முன் பாசறையிட்டான். அவனுடைய கப்பல்களைக் கிரேக்கர் தீயிட்டுத் தொலைத்தனர். முகம்மதிய ஆழிவேந்தன் சலிமான் இறந்தபின் அராபியப்படைவீரர் குளிர்தாங்கமுடியாது வருந்தினர். கிரேக்கருடைய தீக்கலங்கள் அராபியருடைய பிறிதோர் கப்பற்படையையும் எதிர்த்தன. உரோமகிரேக்கர்தலைவன் லீயோ பல்கேரியருடைய உதவியைப் பெற்றான். மஸ்லீமா அதைக் கேள்வியுற்றுத் தம்நாடு திரும்பினான். தீயே கிரேக்கநகரைக் காத்தது. இத்தீ ஒருவகைக் கந்தகக்கலப்பாலாகியது. இக்கலப்பை முகம்மதியன் ஒருவன் உரோமருக்குச் செய்துகாட்டினன். உரோமர் இவ்வித்தையைப் பிறர்க்குக் கற்பியாது மறைபொருளாக வைத்திருந்தனர்.

கி. பி. 731-ல் அப்துல்ரகிமான் பிரஞ்சுதேசத்தில் புகுந்து பிறைக்கொடியை நாட்டினன். அடுத்த ஆண்டு பிரஞ்சுவேந்தன் சார்லஸ் முகம்மதியரை வென்றான். ஓமையா குடும்பம் முகம்மது குடும்பத்தோடு சம்பந்தம் இல்லாததாகையால் கசிம் குடும்பத்தார் கலகம் விளைத்தனர். ஓமையாகட்சியார் வெண்டலைப் பாகையணிந்தனர், கசிம் என்பவனுடையகட்சியார் கருந்தலைப் பாகையை அணிந்தனர். கி. பி. 750-ல் ஓமையா கட்சியார் குன்றின ராயினும் அப்துல்ரகிமான் ஸ்பெயின்தேசத்தில் முகம்மதிய ருடைய ஆட்சியை நிலைநாட்டினன். முகம்மதியவேந்தன் அல்மான் சர் பாக்தாதைத் தலைநகராக்கினன். அக்காலத்தில் கோன்ஸ்டன் டைன் மைக்கல் என்னும் உரோம கிரேக்கர் தலைவன் அரசாண்டிருந்தான்.

கி. பி. 723-ல் அராபியர் சிசிலித்தீவில் இறங்கினர். கத்தோ லிக்கப்பள்ளியிலிருந்த துறவியொருத்தியை ஒரு இளைஞன் காமுற்றதினால் தன் நாக்கை யிழந்தான். அவன் முகம்மதியரை 727-ல் சிசிலித்தீவில் இறங்கும்படி தூண்டினன். சிசிலியர் முகம் மதுசமயத்தைத் தழுவினர்.

அராபியர் உரோமாபுரத்திலும் சூறையாடினர். முகம்மதியர், இருகட்சியினராகப் பிரியாவிடின் இத்தாலியாதேசத்திலும் தம் ஆட்சியைச் செலுத்தியிருப்பர். கி. பி. 907-ல் ஆபிரிக்கநாட்டு முகம்மதியர் அராபிய ஆழிவேந்தனுக்கு அடங்காது சுயாதீனராயி னர். கி. பி. 933-ல் பார்சியரும் சுயராச்சியம் பெற்றனர். முகம்மது வின்பின் 39-ஆவது தலைமுறையாக ஆண்ட வேந்தன் இரதியன் காலத்தில் மூன்று நூற்றாண்டு நிலைத்திருந்த முகம்மதிய இராச்சியம் சிற்றரசுகளாகப் பிரிந்தது. கி. பி. 960-ல் நிக்கபோரஸ்பக்கர் என்னும் உரோமகிரேக்கர்தலைவன் அராபியரைச் சிரியாதேசத்தி னின்றும் துரத்தமுயன்று தானே முதுகிட்டனன்.

## உரோமகிரேக்கர்.

உரோமாபுரத்தில் உரோமர் எங்ஙனம் வாழ்ந்தனரோ அங்ங னமே கன்ஸ்ராந்திநோப்பிளில் உரோமகிரேக்கர் வாழ்ந்தனர்; போர் நடாத்தும் முறையிலாயினும்சரி சமயக்கலகங்களிலாயினும்சரி கல்விபயிற்றுமுறையிலாயினும் சரி வியாபாரமுறைகளிலும் சரி உரோமகிரேக்கர்முறை பண்டை உரோமர்முறையினின்றும்

வித்தியாசப்பட்டதன்று. அராபியரும் பல்கேரியரும் ஹங்கேரியரும் ருஷியரும் வடக்கரும் துருக்கரும் ஒருவர்பின் ஒருவராகக் கிரேக்க உரோமரோடு பொருது அவருடைய இராச்சியத்தைப் பங்கப்படுத்தினர். கி. பி. 711-ல் பல்கேரியர் கன்ஸ்ராந்தினப்பிள் புகுந்து அரசன் நிக்கபோரஸ் என்பவனைக் கொன்று ஆரவாரித்தனர். கி. பி. 917-ல் சிமியன் என்னும் தலைவன் தலைநகரை முற்றுகையிட்டுத் திறைபெற்றான். கி. பி. 924-ல் ஹங்கேரிய மைக்கியர்கள் பல்கேரியரையும் கிரேக்கரையும் துரத்தினர். சர்மானியர் மைக்கியரோடு பொருது வென்றனர். கி. பி. 950-ல் வடக்கர் இத்தாலியா கிரேக்கு என்னும் தேசங்களில் சூறையாடினர். ருஷியர் தலைவனுடைய கப்பற்படையைக் கிரேக்க தீக்கலங்கள் எரித்தன. கிரேக்கர்தலைவன் நிக்கபோரஸ் ருஷியர்தலைவனுக்குத் திறை கொடுத்துச் சமாதானம் செய்துகொண்டான். சிமிக்கிஸ் என்னும் வேந்தன் ருஷியரை வென்றான். ருஷியவேந்தன் வலோடிமர் உரோமரிடம் மணமகள்பெறுதற்காகக் கிறிஸ்துமதத்தைத் தழுவினான். அதன்பின் ருஷியாதேசத்தில் கிறிஸ்துமதம் பரம்பிற்று.

கி. பி. 840-க்கும் 1017-க்கும் இடையிட்டகாலத்தில் சரசினர் பறங்கியர் உரோமகிரேக்கர் என்போர் இத்தாலியாநாட்டை ஆளுதற்கு ஒருவரோடு ஒருவர் பொருதனர். தென்னித்தாலியில் கி. பி. 870-ல் சரசினர் தம் கொடியை நாட்டினர். கி. பி. 1016-ல் வடக்கர் வந்து இறங்கிச் சிசிலியில் தம் ஆட்சியை நாட்டினர். வடக்கரும் கிறித்துமதத்தைத் தழுவினர். வடக்கர் துணையோடு உரோமகிரேக்கர் சரசினரை வென்றனர். கி. பி. 1049-ல் வடக்கர் கிறித்தவகுரு லீயோ 9th என்பவனை வென்றபின் கிரேக்கர் தலைநகரைத் தாக்கச்சென்றார்கள். கி. பி. 1081-ல் றப்போட் என்னும் வடக்கன் அலேச்சியஸ் வேந்தனோடு, டுறசாக்களத்தில் பொருதுவென்றான். சர்மானிய ஆழிவேந்தன் மூன்றாவது ஹென்றி இத்தாலியிலும் ஆட்சிசெலுத்தினன்.

[தொடரும்]

ஸ்ரீ:

# திருச்சின்னமாலை.

[ஸ்ரீ. ப. வே. திருமலை ஐயங்காரவர்கள், காரியதரிசி,
திருவல்லிக்கேணித்தமிழ்ச்சங்கம், சென்னை.]

தேவதைகளுக்கெல்லாம் அதிதேவனாகிய பேரருளாளனுடைய யாத்ரோத்ஸவாதிகளில் ஊதப்படுவது "திருச்சின்னம்" என்கிற வாத்யவிசேஷம். இரகசியார்த்தகர்ப்பமான திருச்சின்ன ஓசையைக் கேட்டுணர்ந்த தூப்புலிறை அதற்குப் பாமாலைசாத்தி மகிழ்ந்தார். அதுவே "திருச்சின்னமாலை". திருவின் நாயகனது அசாதாரண குணங்களை நிரூபித்து அப்படிப்பட்ட குணங்களையுடைய பெருமாள் எழுந்தருளினார் என்று அநுஸந்தித்து அவற்றை விசதமாக்குவதே திருச்சின்னமாலை. இதன் பாசுரத்தொகை பதினொன்று.

அசுவமேதயாகசாலைக்குச் செல்லச் செழுமணித் திண்டேர் ஏறினான் ஸ்ரீராமபிரான். அப்பொழுது திருச்சின்னங்கள் மாறி மாறி ஊதத்தலைப்பட்டன. எங்ஙனம் என்பது கீழ்ப்பாசுரங்களிற் காண்க. (உத்தரகாண்டம். அசுவமேதயாகப்படலம்.)

"கம்புவைத்தரித்தகையிற்கார்முகந்தரித்தான்வந்தான்
அம்புயக்கண்ணன்வந்தானன்பருககன்பன்வந்தான்
தம்பியர்க்கினியான்வந்தான்றசரதராமன்வந்தான்
உம்பருக்கமிழ்தமுன்னாளுதவியவொருவன்வந்தான்" (73)

"குன்றினாலாழிகட்டிக்கொடுந்திறற்சேனையோடு
சென்றிராக்கதரையெல்லாஞ்செருக்களத்தவியநூறித்
தன்றிறலழிந்துநின்றதசமுகன்வலிமைகண்டங்
கின்றுபோய்நாளைவாவென்றியம்பியவிறைவன்வந்தான்" (77)

"முன்னநாஞ்சொன்னநாளின்முடுகிநாஞ்செல்லோமாயின்
வன்னியிற்பரதன்வீழுமென்றுதன்மனத்திலெண்ணி
அன்னவனெரிவிழாமலநுமனைமுன்னேயேவிப்
பொன்னகரடைந்தான்வந்தான்புவனமூன்றுடையான்வந்தான்" (78)

"என்றுசின்னங்கடம்மி லிசைந்துடன்மாறியூதத்
தன்றுணையிலாதவென்றித் தசரதராமன்றேர்மேல்
பொன்றிகழ்மாடவீதிபுகுந்தனன்"

என்று வருவது திருச்சின்னம் பரிமாறியதை விளக்குகின்றது.

தேசிகனார் திருச்சின்னமாலை எண்சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தங்களாக யாக்கப்பெற்று, ஒவ்வொருபாசுரத்திலும் "வந்தார்" எனும் பதம் எண்முறையமைந்து, ஈற்றடியிறுதி "வந்தார் தாமே" என அமைந்துள்ளது விசேடித்து அநுபவித்தற்குரியது.

இம்மாலை சுருக்கமானவொருபிரபந்தம். தேசிகமாலையில் இது ஒன்பதாவது திருப்பதிகம். இது திருமந்திரம், த்வயம், சரம சுலோகம் என்ற மூன்று இரகசியங்களின் பொருளையும் இன்னபடி என்று காட்டுகின்றது. திருமந்திரச்சுருக்கு (10); த்வயச்சுருக்கு (12); சரமசுலோகச்சுருக்கு (11) என்றும் தனிப்பிரபந்தங்கள் உள்ளன. அவற்றின் ஆழ்பொருளை அடக்கிக்கொண்டு மிளிர்வதும் இம்மாலையே.

இதனுள், முதலாறு பாசுரங்கள் திருமந்திரத்தைப் பிரதிபாதிக்கின்றன. இவற்றில் முதல் மூன்றுபாட்டுக்கள் பிரணவார்த்தத்தை வெளியிடுகின்றன. அவற்றுள் ஆதிப்பாட்டு, பிரணவத்தில் அகாரத்தின் அர்த்தத்தைச் சுருங்கக் கூறுகின்றது. பிரயோஜனாந்தரபரருக்கும் அவன் ரக்ஷகன் என்பதும், பிரமன் முதலியோரைக் கொண்டு ஜகத் ஸ்ருஷ்டிபண்ணிவைக்கிறபடியினால் அவன் நிமித்த காரணன் என்பதும் இதில் விளக்கம். இரண்டாம்பாட்டு பிரமனுக்கு வேதங்களை உபதேசித்து ஜ்ஞானத்தை உண்டாக்கி அத்தால் நிமித்தகாரணமாகும் பிரகாரமும் சாஸ்திரங்களை ப்ரவர்த்தித்து மோக்ஷப்ரதானமாகிற ரக்ஷணப்ரகாரமும் கூறுகின்றது. மூன்றாம்பாட்டு அகாரத்தின்மேல் ஏறி லோபித்துக்கிடக்கும் நான்காம்வேற்றுமையையும் உகார மகாரங்களின் அர்த்தங்களையும் வாக்யார்த்தம் இருக்கும்படியையும் விளக்குவன. நான்குமுதல் ஆறுவரையுள்ள பாக்கள் நம: சப்தார்த்தத்தையும் நாராயணசப்தார்த்தத்தையும் சதுர்த்தீவிபக்தியினால் லக்ஷணையாகச்சொல்லப்படுகிற கைங்கர்யமாகிற அர்த்தத்தையும் விளக்குகின்றன.

த்வயார்த்தத்தை வெளிக்காட்டுவது ஏழாம்பாட்டு. சரமசுலோகக் கருத்தைச் சுருக்கிக்கூறுவது எட்டாம்பாட்டு. சரமசுலோகத்தில் மாம், அஹம் என்கிற பதங்களிலே ப்ரஸ்துதங்களான பரத்வ ஸௌலப்யாதிகுணங்களை அவனுடைய திவ்யசேஷ்டிதமுகத்தாலே நிரூபிப்பது ஒன்பதாம்பாட்டு. பத்தாம்பாட்டு அர்ச்சாவதார வைபவத்தைப் பரக்கப்பேசுகின்றது. நிகமனப்பாசுரம் இம்மாலைச் சுருக்கத்தையும், சங்கதியையும், பேரருளாளன் பிரபாவமான இந்நூல் சிற்றின்பம் இசையாதார்க்கு இனிதாம் என்பதையும் புலப்படுத்துகின்றது. இப்பாசுரம் தூப்புல்வள்ளலார்தமிழ்த்திறனை நன்குகாட்டலின் இங்கே தரப்பெறுகின்றது.

"மறைத்தலையி லிசையெழுத்தில் வணங்கும் வாக்கில்
மந்திரத்தி னுலெழுத்தாந் திருநா மத்தில்
நிறைத்திலகு வேற்றுமையி லிரண்டா மொன்றி
னெடுமாறன் கீதையெல்லா நிறைந்த சொல்லில்
உறைத்தவர்கண் டுரைத்தபொரு ளான தெல்லா
முயர்விருத வருளாளப் பெருமா டேசின்
திறத்திலிவை திருச்சின்ன மாலை பத்தும்
செவிக்கினிதாம் சிற்றின்ப மிசையா தார்க்கே" (11)

இதனால், பேரின்பமிசைந்தவர் செவிக்கினிய செஞ்சொன்மாலை இதுவென்பதுதேற்றம்.

இதுகாறும் கூறியவாற்றால் "திருச்சின்னமாலை" என்ற பிரபந்தம் ஒப்பற்றதென்றும், அது அவசியம் ஓதியுணரவேண்டுவதொன்றென்றும், பேரின்பமடையவிரும்பும் மக்கள் அநவரதம் பாராயணம்பண்ணுதற்கேற்றதென்றும், அதனை இயற்றியருளிய தேசிகனார் தூப்புல் திருவேங்கடேசகுரு என்றும் உணரலாம்.

ஸ்ரீ:

# மதிப்புரை.

[சங்க இலக்கியம்:— (எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் மூலம் மட்டும்) சென்னை சைவசித்தாந்த மகாசமாஜப்பதிப்பு. ஒருபிரதி விலை ரூ. 3–4–0. தபாற்கட்டணம் வேறு. கிடைக்குமிடம்:— சைவசித்தாந்த மகாசமாஜம், திருவருளகம், 22. A கல்லுக்காரத் தெரு, மயிலாப்பூர், சென்னை.]

சங்க இலக்கியமென்பன பண்டைத் தண்டமிழ்ச் சான்றோர் தமிழ்மக்கள் அம்மொழிப்புலமையடைதற்கு உபகாரமாகத் தொகுத்துதவிய எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் முதலியன வாம். அவை அகமும் புறமுமாகிய பொருள்விகற்பம்பற்றிப் பலப் பல புலவர்களியற்றிய பாடல்களைக்கொண்டு விளங்குவன. அவற் றுள் எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் பெருங்கடல்கள்போற் பரந்து ஆழ்ந்து அளவிடற்கரியவாய் அரும்பொருள் பலவும் வாய்ந்து திகழ்வனவாகும். இவற்றுள் காணப்படும் செய்யுட்கள் 2381. இவற்றை இயற்றிய புலவர் சற்றேறத்தாழ ஐந்நூற்றுவ ராவர்.

இவருள் ஒரே புலவர் இயற்றிய பலசெய்யுட்கள் பலநூலுள் விரவியுள்ளன. அதனால் ஒருபுலவர்செய்தியெல்லாம் அறியவிரும்பு வோர் அவரியற்றிய பலசெய்யுளையும் ஆராய்தற்குப் பலநூல்களைப் புரட்டித் தேடிக் காணும்படியாயிருந்தது. இது, தமிழாராய்ச்சியிற் றலைப்படுவார்க்குச் சிறிது இடர்ப்பாட்டை விளைப்பதுகண்டு, அது நீங்குமாறு எட்டுத்தொகையுள்ளும் பத்துப்பாட்டுள்ளும் காணப் படும் செய்யுள்களை யியற்றிய புலவர்பெயர்களையெல்லாம் அக ராதிவரிசையில் தொகுத்து ஒவ்வொரு புலவர்பெயரின் கீழும் அவரியற்றிய செய்யுட்களையெல்லாம் (அவைபயின்றுள்ள நூல் களை அகநானூறு ஐங்குறுநூறு கலித்தொகை குறுந்தொகை நற்றிணை பதிற்றுப்பத்து பத்துப்பாட்டு பரிபாடல் புறநானூறு: என்று முறைப்படவைத்துத்) தொகுத்துச் சென்னைச் சைவசித் தாந்த மகாசமாஜத்தார், தக்க புலவர்துணைகொண்டு ஆராய்ந்து பலபல சிறந்த திருத்தங்களுடன் சங்க இலக்கியம் என்ற பெய ரால் ஆயிரத்தைந்நூற்றறுபதுபக்கமுள்ள அழகிய புத்தகமாக அச்சிட்டு வெளியிட்டுள்ளார்கள்.

இப்பதிப்பு, விளக்கமான முகவுரையுடனும், ஆராய்ச்சிமுறையிற் சங்க இலக்கியங்களைப் பயில்வார்க்கு இன்றியமையாது வேண்டற்பாலனவாகிய பல விவரங்களடங்கிய அட்டவணைகளுடனும் அகராதிகளுடனும் கூடியது. பாடியவர் செய்தியேயன்றிப் பாடப்பெற்றவர்செய்திகளையும் தொகுத்துணர்த்தும் அட்டவணையும் சேர்க்கப்பெற்றது. இது, பன்னரு நலம்பல மன்னி யிலகுதல், சென்னைப் பல்கலைக்கழகத்துத் தமிழ்நீடரும் பழந்தமிழ்நூலாராய்ச்சியிலேயே இன்புற்றுப் பொழுதுபோக்குபவரும் ஆகிய ராவ்ஸாஹிப். ஸ்ரீ. S. வையாபுரிப்பிள்ளையவர்கள் நன்முயற்சியால் என்பது இதற்குச் சைவசித்தாந்த மகாசமாஜக்காரியதரிசியவர்களெழுதிய முகவுரையினால் நன்குவெளியாகும்.

ஒருநூலைச் சிறந்தமுறையிற் பதிக்கமுயல்வார்க்கு அந்நூற் செய்யுள்களிற் சில இடங்களில் உண்மையுருவங்காணும் முயற்சியில் நேரும் இடையூறுகள் பல. அவற்றால் சோர்வடையாது இப்பதிப்பை நன்குவெளியிட்டுதவிய சைவசித்தாந்த மகாசமாஜத்தார்க்குத் தமிழ்மக்கள் நன்றிபாராட்டும் கடப்பாடுடையாராவர்.

பழந்தமிழ்நூல்களை அவ்வந்நூற்பொருள் பலவும் எளிதின் விளங்குமாறு யார்யார் எத்தனையெத்தனை விஷயவிளக்கக் குறிப்புக்களுடன் எத்தனைமுறை பதிக்கினும் அவையெல்லாம் தமிழ்மக்களால் விரும்பி யேற்றுக்கொள்ளத்தக்கனவேயாம்.

இப்பதிப்பினைத் தமிழ்ப்புலமைநலம்வாய்ந்து, தமிழ்வளருமாறு தம் உடல் பொருள் ஆவி மூன்றும் உதவியவரும், தொல்காப்பியமும் எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் ஆகியவற்றைத் தேடிக்கண்டு சிறந்தமுறையிற் பதித்துதவியவருமான பேரறிவாளர்களுக்கு உரிமையாக்கியிருப்பது மிகவும் பாராட்டத்தக்கது.

இப்பதிப்பிற்கான பொருட்செலவு முதலியவற்றை நோக்குமிடத்து இதற்கு இடப்பட்டுள்ள விலை மிகக்குறைவென்றே சொல்லவேண்டும். இவ்வாறே இன்னும் பல பெருந்தமிழ்நூல்களைச் சிறிய விலையிற் பெரும்பயனடையுமாறு தமிழுலகுக் குதவிக்கொண்டு சைவசித்தாந்த மகாசமாஜம் நீடுவாழ்வதாக.

[வே. ப. சுப்பிரமணியமுதலியார்தனிக்கவித்திரட்டு:— இது தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழக வெளியீடு. இதன் விலை ராப்பர்பைண்டு ரூ. 0–12–0. கலிகோபைண்டு ரூ. 1–0–0 கிடைக்குமிடம்:—தென்னிந்தியசைவசித்தாந்தநூற்பதிப்புக்கழகம், கீழரதவீதி, திருநெல்வேலி.]

வெள்ளகால் திருவாளர் ராவ்ஸாஹிப். வே. ப. சுப்பிரமணிய முதலியாரவர்கள் அவ்வப்போது இயற்றிய தனிநிலைக்கவிகள் பலவற்றையும், கடவுள்வாழ்த்து குருவணக்கம் அறிவுரைகள் அகப்பொருட்டுறையமைந்தகவிகள் பலசந்தர்ப்பங்களிற் பாடியவை நிருபகவிகள் சிறப்புப்பாயிரங்கள் தற்சிறப்புப்பாயிரம் அநுபந்தம் என்று தனித்தனித் தலைப்பின்கீழ்த் தொகுத்து, திருநெல்வேலி மதுரை திரவியம் தாயுமானவர் இந்துகலாசாலைத் தமிழாசிரியர் வித்துவான் திரு. கு. அருணாசலக்கவுண்டரவர்கள் அச்செய்யுள்களின்பொருள் இனிது விளங்கும்படி எழுதியுதவிய குறிப்புரையுடன் திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்தநூற்பதிப்புக் கழகத்தார் தமிழ்மக்களுக்கு நல்விருந்தாகும்வண்ணம் சுப்பிரமணிய முதலியார்தனிக்கவித்திரட்டு என்ற பெயரால் அச்சிட்டுவழங்கியுள்ளார்கள்.

இத்திரட்டுள் கடவுள்வாழ்த்து 7 செய்யுள்களால் இயன்றது. அவற்றுள் குற்றாலநாதர் உமாதேவி, சுப்பிரமணியர் என்போர் விஷயமான செய்யுள்கள் செய்யுளமைதியானும் பொருணயத்தானும் கற்பனையானும் தலைசிறந்துவிளங்குவனவாகும்.

குருவணக்கம், திருவாவடுதுறை ஸ்ரீலஸ்ரீ அம்பலவாணதேசிகமூர்த்திகள்விஷயமானது; 32 செய்யுளால் அமைந்தது. இது குருவின் பெருமையைப் பரக்கப்பேசி இடையிடையே சைவசமய உண்மைக்கருத்துக்களையும் விதந்துசெல்வது.

அறிவுரைகள் என்ற தலைப்பின்கீழ்வரும் சருவசனசெபம் முதலியன ஒழுக்கநெறியை வலியுறுத்திப் படிப்போருளத்திற் பதியச்செய்யும் நடையழகும் வாய்ந்து திகழ்கின்றன. இதனுள் பூரணநாகரிகம் நன்மைசெய்யும்முறை வேசைவிலக்கு நீதிக்கடமை மருத்துவர்க்கு நல்ல மதி என்ற தலைப்பின்கீழ்வருமவை

படித்துப் படித்து இன்புறத்தக்கன. மேலும், மருத்துவர்க்கு நல்ல மதி என்ற தலைப்பின்கீழ் உள்ள செய்யுள் முதலியன ஆசிரியருடைய மொழிபெயர்க்குந்திறனை நன்கு வெளியிடுகின்றன.

அகப்பொருட்டுறையமைந்தகவிகள், யமகம் திரிபு மடக்கு முதலிய சொல்லணிகளும் பொருளணிபலவும் வாய்ந்தவை; பொருள் எளிதின் விளங்கும் இயல்பின. இவற்றுள் பெரும்பாலன தமிழ்ப் புலமையும் தமிழ்ப்புலவர்மாட்டுப் பெருமதிப்பும் உடையவரும் தமிழ்நூலாராய்ச்சியும் தமிழ்ப்புலவரொடு பழகுதலுமே பொழுது போக்காக உடையவருமாயிருந்த ஊற்றுமலை ஜமீந்தார் இருதயாலயமருதப்பத்தேவர் விஷயமாக அமைந்தவை.

பலசந்தருப்பங்களிற் கூறியவையும் நிருபகவிகளும் என்ற தலைப்பின்கீழ் உள்ளவை, ஆசிரியர் தாம் நெருங்கிப்பழகிய புலவர் செல்வர் ஜமீந்தார் பெரியோர் முதலியோர் விஷயமாக இயற்றியனவும் பிறவுமாம். இவற்றால், பல புலவரையும் செல்வரையும் ஜமீந்தார்களையும் பற்றிய செய்திகளும் அவர்களுக்கும் ஆசிரியர்க்கும் உள்ள தொடர்புகளும் நன்கறியலாகும். இவை காலக்குறிப்புக்களுடன் சரிதமெழுதுவார்க்கும் மிகவும் பயன்படத்தக்கன.

பாயிரங்கள் என்றதலைப்பின்கீழ் உள்ளவை ஆசிரியர் பிறபுலவரியற்றிய நூல்களின் பெருமை முதலிய விளங்கும்படி செய்தளித்த பாடல்களாகும். சுவர்க்கநீக்கத் தற்சிறப்புப்பாயிரத்தால் ஆசிரியருடைய முன்னோர்வரலாறு முதலியன புலப்படும்.

இறுதியிலுள்ள எருதின் இலக்கணங்கூறுஞ்செய்யுளால் ஆசிரியர்வகித்த உத்தியோகத்துறையில் அவர்க்குள்ள அநுபவமுதிர்ச்சியும் தாம் அறிந்தவற்றைத் தெளிய வுரைக்கும் தன்மையும் வெளியாகும்.

அகலிகைவெண்பா, சுவர்க்கநீக்கம், கோம்பிவிருத்தம் நெல்லைச்சிலேடைவெண்பா முதலியவற்றைப்படித்து ஆசிரியருடைய கவியமைதியெல்லாம் நன்குணர்ந்தார்க்கு இத்தொகைநூற்செய்யுளமைதிபற்றிக் கூறுவது மிகையாகும்.

சற்றேறத்தாழ 350 தனிநிலைச்செய்யுள் அமைந்த இத்தொகை நூலுள் ஆசிரியருடைய ஆங்கிலமொழித்தேர்ச்சியும் தமிழ்மொழிப் புலமையும் ஒருங்கியைந்து பாலொடு தேன்கலந்தாற்போன்று யாண்டும் சுவைபயந்துநிற்றலும், ஆசிரியர் தாம் கூறக்கருதிய வற்றை நன்குவகுத்து அணியமைதியுடன் தெளிவுறக் கூறுந் திறனும், பலதுறையினும் ஆசிரியர்க்குள்ள அநுபவமுதிர்ச்சியும் அவர்தம் மனத்திட்பமும் தூய்மையும் இடையறுமுயற்சியும் சமரசபாவமும் ஒழுக்கநேர்மையும் உலகியலறிவும் முதலியவெல்லாம் நன்குபுலனாகும்.

இதற்கு அண்ணாமலைப் பல்கலைக்கழகத்துத் தமிழ்ப்பேராசிரியர் பண்டிதமணி. திரு. மு. கதிரேசச்செட்டியாரவர்கள் எழுதியுள்ள முகவுரை இதன் சிறப்பனைத்தும் புலப்படுத்துநிற்கிறது.

இதனைத் தமிழுலகிற் பெரும்பேராசிரியராய்த் தமிழ்க்குதவிய மகோபகாரியாய்த் திகழும் டாக்டர் ஸ்ரீ. உ. வே. சாமிநாதையரவர்களுக்கு உரிமையாக்கியிருப்பது மிகவும் போற்றத்தக்கது.

இவ்வரிய தொகைநூலைத் தங்கள் கழகவெளியீடாக அச்சிட்டுதவிய தென்னிந்திய சைவசித்தாந்தநூற்பதிப்புக்கழகத்தாருடைய தமிழ்ப்பற்றும் தமிழ்ப்புலவரைப் பாராட்டும் சீர்மையும் நன்குமதிக்கத்தகும்.

ஶ்ரீ:

தா(யா)ராநகரவேந்தன் போஜதேவன் இயற்றிய

# ஸரஸ்வதீகண்டாபரணம்.

## (கலைமகள் கழுத்தணி)

[சகூஅ-ஆம் பக்கத் தொடர்ச்சி.]

முன்பு குற்றங்கள் பதினாறே கூறப்பட்டுள்ளன. அங்ஙனமிருப்பத் தோஷகுணங்கள் இருபத்துநான்கென்று கூறியிருப்பது எவ்வாறு பொருந்தும்? இவையும் பதினாறேயாகற்பாலனவன்றோ? என்னும் ஆசங்கைக்குச் சமாதானம் கூறப்படுகின்றது:—

அஶ்லீலாமங்கலக்ருணாவத்யத்ப்ரத்யாயதே த்ரிதா ।
பவந்தி நவதைந்யேத பூர்வோக்தா ஏஷ ஷோடஶ ॥

தத்ர விம்ஶதிரித்யேஷா ப்ரோக்தா பதஸமாஶ்ரயா ।
ஸமாஸாத்வ்யஷ்டிரூஷ்டோ தோஷாணாம் குணஸம்ஸ்தவே ॥

இத்யத்ர தோஷாணாம் தோஷகுணத்வமீரிதம் ।
இதாநீம் வாக்யதோஷாணாம் குணத்வமபிதீயதே ॥ கக0 ॥

முன்பு பத தோஷங்கள் (—சொற்குற்றங்கள்) பதினாறு கூறப்பட்டன. அவற்றுள் கிராமியத்தின்பாற்பட்ட அசிலீலம் அமங்களம் அருவருப்பு என்னும் மூன்று குற்றங்களும் மும்மூன்று வகைப்படுவனவாய் ஒன்பதுவகைப்படுகின்றன. இவ்வொன்பதனோடு மற்றுமுள்ள பதினைந்து குற்றங்களையும் சேர்ப்பக் குற்றங்கள் இருபத்துநான்காயின. அவ்விருபத்துநான்கு குற்றங்களும் குணமாகுங்கால் அத்தோஷகுணங்களும் இருபத்துநான்கெனப்பட்டன.

இனி வாக்கியக் குற்றங்கள் குணமாதல் வருமாறு:—

### 1. சத்தஹீநம்.

தத்ர ஶப்தவிஹீநஸ்ய விவக்ஷாவஶதஃ க்வசித் ।
நிஸர்கஸுந்தரத்வேந குணத்வம் பரிகல்ப்யதே ॥ ககக ॥

'இலக்கணவழு' என்னும்குற்றம் சில இடங்களில் கூறுவோன் கருத்துவகையால் அழகமைந்துவிளங்குதலால் அது ஆண்டுக் குணமென்று கொள்ளப்படும்.

உதாரணம்:—

ஆக்ஷிபந்த்யரவிந்தா³நி முக்³தே⁴ தவ முக²ஶ்ரியம் ।
கோஶத³ண்ட³ஸமக்³ராணாம் கிமேஷாமஸ்தி து³ஷ்கரம் ॥

ஓ யுவதியே! உன் முகத்தின்பொலிவைத் தாமரைகள் ஆக்ஷேபிக்கின்றன; கோசமும் (—செல்வப் பொக்கிஷமும்) தண்டமும் (—சேனையும்) குறைவற்றிருப்பவற்றிற்கு முடியாத காரியம் ஏது?

இங்கே "ஏஷாம் து³ஷ்கரம்" என்புழி ஆறும்வேற்றுமை வந்திருப்பது இலக்கணவழுவேயாயினும் வேறுபொருளை (-சம்பந்த மாத்திரத்தை) ஒட்டிக்கூறவந்த கவியின் கருத்துவகையால் குணமாயிற்று.

ஒருபெரியார் கூறுவர்:—

ஈத்³ருஶம் ஹி ஶாஸ்த்ரஸம்ஹாரத்³ருஷ்டம் நாமவஸ்து தத்வஸாம் ।
கவயஷ்ணவந்தி நவ வைஶஸார்த்த²ம் ஶ்ருதி ॥

(மேற்காட்டியதுபோன்ற) சொல்லிலக்கணவழுவமைதிவழக்குகள் இலக்கணநூற்பொருளை நுணுகியாராயாது பருப்பொருளே காணு மியல்புடையோர்க்குக் குற்றமுள்ள வழக்குப்போலத் தோன்றுவனவாம்; ஆயினும் அவை (குற்றமாகாது) குணமேயாம்.

## 2. கிரமப்பிரஷ்டம்.

யத்ந꞉ ஸம்ப³ந்த⁴நிர்ஜ்ஞாநே ஹேதோ꞉ கோ(அ)பி க்ருதோ யதி³ ।
க்ரமோல்லங்க⁴நமப்யாஹுர்ந தோ³ஷம் ஸூரயோ யதா² ॥

சொற்களுக்கு ஏதேனும் ஒரு சம்பந்தம் தெரிவதன்பொருட்டு யாதேனும் ஒரு முயற்சி செய்யப்பட்டிருப்பின், அங்கு முறை தவறிக் கூறுதல் குற்றமாகாது (குணமேயாம்) என்பர் அறிந்தோர்.

உதாரணம்:—

[illegible]।
[illegible]॥

உறவினரைப்பிரிதல் உடலைப்பிரிதல் தம்தேயத்தைப்பிரிதல் என்னும் இம்மூன்றனுள் முதலாயதும் கடையாயதும் நெடுந்துன்பத்தைத் தருவனவாம்; நடுவணது கணப்பொழுதே வருத்தந் தருவதாம்.

ஈண்டு, நெடுந்துன்பம் பயக்குமியல்புள்ள இரண்டனையும் அடுத்தடுத்துக் கூறாததாற் சொன்முறை தவறியதாம். உறவினரைப் பிரிதலினும் தன்உடலைப் பிரிதலே பெருந்துன்பம் பயப்பதென்பது உலகியல்பானே அறியக்கிடப்பவும், அதற்கு மாறாக உடலைப்பிரிதலினும் தேயத்தைப்பிரிதலும் உறவினரைப்பிரிதலுமே பெருந்துயர்தருவ எனக் கூறியிருப்பதனாற் பொருண்முறை தவறியதாம். இவற்றுள், சொன்முறை தவறியிருப்பினும் "முன்னதும் பின்னதும் நெடுந்துயர்தருவ" என அவ்விரண்டனையும் தொகுத்துக்கூறி இயைபுபடுத்திருத்தலால் அது குற்றமாகாது. பொருண்முறை தவறியிருப்பினும், கூறுவோன் உடற்பிரிவினும், உறவினரையும் தேயத்தையும் பிரிதலைப் பெருந்துயர் விளைப்பனவாகக் கூறக்கருதி அங்ஙனங் கூறுகின்றமையின் அதுவும் குற்றமாகாது.

### 3. விஸந்தி.

[illegible]।
[illegible]॥

முன்பு இன்னாங்காக இசைக்கும் புணர்ச்சி 'விஸந்தி' என்னும் குற்றமாகக் கூறப்பட்டது. அது, 'தூர்வசகம்' 'பிரகிருதியம்' முதலியவிடங்களில் குற்றமெனப்படாது குணமாம்.

தூர்வசகத்தில் விஸந்தி குணமாதற்கு உதாரணம்:—

ஜயதி வஷ-்ாஷிதி ஊ௱-் ஓ௱௱-்யொ:
வ௱ஓ௱வ-்வா ஓ௱வ-்வகஷ௱யக்ஷ ।
கஹெணெஹெஜெ வ8வொ ஹஹொஹ௱
ஹ௱ஊஜ8ஷுணவி வயுெறெயிந: ॥

(இது சிவபிரானும் பார்வதிதேவியாரும் பேசிக்கொள்வதாக அமைந்துள்ளது.)

சிவபிரான்:—தாமரைமலர்போன்ற முகமுடைய மலையரசன் புதல்வியே! மேகங்கள் நிறைந்த ஆகாசம் சந்திரன் மறைந்த நிலைமையதாயுள்ளது.

பார்வதி:—ஆயின் நீர் எமக்குத் துணைவராய் இருத்தற்குரியராகின்றீர்.

இச்சுலோகத்தின் பின்பகுதியில் வந்துள்ள புணர்ச்சிவிதிகள் செவிக்கு இன்னாங்காக இசைப்பனவாயும் உச்சரித்தற் கிடர்ப்பாடு தருவனவாயுமிருத்தலால் இது 'விஸந்தி' என்னும் குற்றத்தின்பாற் படுமாயினும், இது துர்வசகமாக (-கூறுதற் கிடர்ப்பாடுதருவதாக) இருக்கவேண்டுமென்றே கருதி இயற்றப்பட்டதாதலால் குற்றமாகாது குணமாயிற்று.

ஒருபெரியார் கூறுவர்:—

"ஶ௱கஷீவாஐ8-ெவ-்ணாம் 8௱வஸம்ஸாரவிஜயெ ।
ஷுஹாவாயவ ஜொஷீஷ௱ வாஷு ஓ௱வ-்வகாஓய: ॥"

கிளி, சிறுவர், பெண்கள், மூடர் முதலியோருக்கு உச்சரிக்கும் திறமை உண்டாக்கவேண்டியும், ஸபைகளில் விநோதத்திற்காகவும் 'துர்வசகம்' முதலியவைகள் சொலலத்தக்கவையாம்.

பிரகிருஹியம் முதலியவற்றில் விஸந்தி குணமாவதுண்டு.

உதாரணம்:—

க8ெஐ ஐவ ஜொவெந ஐ௫8
கந௱வயுாதி விஜாஸவஐதி: ।
வ ஐெதாZஷஐதாவுதவியொ
நஜவஷும் ந யஜ-்ஷி ஊஹெவ ॥

தாமரைபோன்ற இக்கண்களைச் சிறந்த விலாஸமானது அடைகின்றது. * * * * *

இங்கே உயிரெழுத்துக்கள் பல இணைந்துநின்று விட்டிசைத்தல் இனிதாயின்றியொழியினும் இது பிரகிருஹ்யவிதி (-ஒருவகை இயல்புபுணர்ச்சிவிதி) பற்றியதாதலால் வழுவாகாது குணமாயிற்று.

அறிஞர் கூறுமாறு:—

"न संहितां विवक्षामीत्यसन्धानं पदेषु यत् ।
तद्विसन्धीति निर्दिष्टं न प्रगृह्यादिहेतुकम् ॥" ॥

"ஒருவன், சொற்களைப் புணர்ச்சிவிதியையொழித்து விட்டிசைத்துக் கூறக்கடவேனென்றுகொண்டுகூறுவதே 'விஸந்தி' என்னும் குற்றமெனப்படும்; பிரகிருஹ்யம் முதலிய இலக்கண நெறியால் விட்டிசைத்தே கூறவேண்டுமவற்றை விட்டிசைத்துக் கூறுதல் அக்குற்றத்தின்பாற்படாது."

## 4. புனருத்தி.

अनुकम्पाद्यतिशयो यदि कश्चिद्विवक्ष्यते ।
न दोषः पुनरुक्तेऽपि प्रत्युतेयमलंक्रिया ॥ ॥

இரக்கம் முதலிய சிலவற்றின் மிகுதிக்குறிப்புள்ள இடங்களிற் கூறியதுகூறல் குற்றமாகாது; மற்று அது குணமேயாம்.

உதாரணம்:—

हन्यते सा वरारोहा स्मरेणाकाण्डवैरिणा ।
हन्यते चारुसर्वाङ्गी हन्यते मञ्जुभाषिणी ॥

காரணமின்றியே பகைவனுயமைந்த மன்மதனுல் அழகிய துடைகளையுடைய அவள் துன்புறுத்தப்படுகிருள்; அழகிய அங்கங்களையுடைய அவள் துன்புறுத்தப்படுகிருள்; இனிமையாகப்பேசும் அவள் துன்புறுத்தப்படுகிருள்.

இங்கே, "हन्यते" என்று மும்முறை வந்திருப்பதும், 'वरारोहा, चारुसर्वाङ्गी' என்று வந்திருப்பதும் கூறியதுகூறலாகத்தோன்றுமாயினும், இவை இரக்கக்குறிப்புணர்த்த வந்தமையால் குற்றமாகாது குணமாயின.

## 5. வியாகீர்ணம்.

பதாநாம் வ்யுத்க்ரமோ யத்ர க்ரமேண வ்யுத்க்ரமேண வா ।
தத்வ்யாகீர்ணம் விஜ்ஞேயஸ்ய ந தோஷ꞉ க்வாபி தத்யதா ॥

முறையாகவாயினும் முறைதவறியாயினும் சொற்களை நிலைமாற்றிக்கூறுதல் 'வியாகீர்ணம்' எனப்படும். அஃது ஓரோவழிக் குற்றமாதலின்று.

[முறையாகச் சொற்களை நிலைமாற்றிக்கூறுதலாவது,-"தலையில் எண்ணெய் தேய்த்துக்கொள்கிறான், அரையில் பட்டாடையை உடுத்துக்கொள்கிறான்" என்று கூறத்தக்க இயல்புமுறையைவிட்டு, "எண்ணெய் தேய்த்துக்கொள்கிறான் தலையில், உடுக்கிறான் பட்டாடையை அரையில்" என்று கூறுதலாம்.

முறைதவறிச் சொற்களை நிலைமாற்றிக்கூறுதலாவது,— "யானைக்கு நீத்து முயற்குநிலையென்ப, கானகநாடன்சுனை" என்றாற்போலக் கூறுவது. இஃது ஒன்றன்பயனிலையை மற்றொன்றனொடு இயைத்துக்கூறுதலால் முறைதவறிய நிலைமாற்றமாம்.]

உதாரணம்:—

ஜஹ்யாஸ்த்வம் நைவ ஸத்வ்ருத்தம் ஸாதவம்
நைவம் பவ நஷ்டஸதாசாரவ்ருத்த꞉ ।
இதீவ வாசோ நிக்ருஹீதகண்டை꞉
ப்ராணைர் முநேர்யஸ்ய ஸுதஸ்ய நா꞉ ॥

'நன்னடக்கையை வெறுக்கவேண்டா; நன்னெறியைக் கைவிடாதவராக நீர் இருப்பீராக.' இச்சொற்கள், கூறுகின்ற முனிபுத்திரனுடைய மிடற்றை நெருக்குபவையான பிராணன்களால் தடைப்படுத்தப்பட்டன.

இங்கே, 'ஸாது ஜஹ்யாஸ்த' என்று இம்முறையே கூறவேண்டியிருப்ப, 'ஜஹ்யாஸ்தவைஸ்ஸ ந ஸத்வ்ருத்தம் ஸாதவம் நைநம்' என்று மாறிக்கூறியிருத்தலால் இது, 'வியாகீர்ணம்' என்னும் குற்றத்திற்கு

இலக்காதற்கு உரியதுபோற் றோன்றினும், இவ்வாறு மாறிக் கூறுதலும் ஒருசாரார் கொள்கைவகையாற் சாலும் என்பவாதலின் இது அக்குற்றத்தின்பாற்படாது குணமாயிற்று.

### 6. ஸங்கீர்ணம்.

வ்ய-்ஸ்தைர்யெண த்வயொர்ய-த்ர வாக்யம் ப்ரஶ்னோத்தராதிஷு ।
ஸங்கீர்ண-ம் தந்ந தொஷாய வாகொவாக்யவிதொவிது: ॥ ௧௧௭ ॥

வினாவும் விடையுமாக வருவதுபோன்ற இடங்களில் இருவருடைய வாக்கியங்கள் முறையே மாறிமாறிவந்து ஸங்கீர்ணமாதற் கேற்பினும், அது குற்றமாகாது, குணமாமென வாகோவாக்கிய மறிந்தோர் கூறுவர்.

[வாகோவாக்கியம்—ஒரு வாக்கியத்துள் வேறும் ஒரு வாக்கியம் வருவது.]

உதாரணம்:—

பாலெ! நாத! விமுஞ்ச மாநிநி ருஷம்
ரொஷாந்மயா கிம் க்ருதம்
கெதொஸ்மாஸு ந மேஸ்பராதா: ஸர்வெஸ்பராதா மயி ।
தத்கிம் ரொதிஷி கத்கதெந வசஸா
கஸ்யாக்ரதொ ருத்யதெ
நந்வெதந்மம கா தவாஸ்மி தயிதா
நாஸ்மீத்யதொ ருத்யதெ ॥

(ஒரு தலைவனுக்கும் அவனோடு ஊடிய தலைவிக்கும் இடையில் நிகழ்ந்த ஸம்பாஷணையாக இது அமைந்துள்ளது.)

தலைவன்:—ஓ பெண்ணே!

தலைவி:—நாதரே!

தலைவன்:—கோபங்கொண்ட நீ கோபத்தை விடு.

தலைவி:—கோபங்கொண்டமையின் என்ளுல் என்னசெய்யப் பட்டது?

தலைவன்:—எம்மீது வருத்தமே.

தலைவி:—நீர் எனக்கு ஒருதீங்கும் இழைக்கவில்லையே! எல்லாக் குற்றமும் என்மீதன்றே உள்ளது.

தலைவன்:—ஆயின், நீ தளர்ந்த சொல்லுடன் ஏன் அழுகின்றாய்?

தலைவி:—யார் முன்பு அழப்படுகின்றது.

தலைவன்:—இது என்முன்பேதான்.

தலைவி:—உமக்கு நான் யாவளாகின்றேன்?

தலைவன்:—காதலி.

தலைவி:—அவ்வாறில்லாமையாலே அழுகின்றேன்.

இங்கே, செய்யுள்முழுவதும் ஒருவர்வாக்கியத்தோடு ஏனையவர் வாக்கியம் அடுத்து விரவியிருந்து 'ஸங்கீர்ணம்' என்று கூறுதற் குரியதாகத்தோன்றினும், இது வினவுத்தரமாகவந்தமையால் குண மென அமைவதாயிற்று.

[தொடரும்.]

V. S. ராமஸ்வாமிசாஸ்திரி, B A., B L.

மதுரை.